[illegible] [illegible]

[illegible] 18 [illegible] 10

3L

[illegible], NIIVD

N26'18.10.

186786.

440 பாலால்—முதல்தர வைர வியாபாரிகள்
216, சைனுபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

॥ ஸ்ரீ: ॥

வேதாந்த தீபிகை

ஸம்புடம் 18] விபவ௵—ஆடி மீ [ஸஞ்சிகை No. 10

பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

வருஷ சந்தா ரூ. 3.] July 1928. [ஸஞ்சிகை, 1-க்கு அணா 6.

18 OCT 1928 MADRAS

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை—ஸ்ரீ. உ.ப. வித்வான் முடும்பி க்ருஷ்ணமாசார்யர், மன்னார்குடி 261
2. ஹிந்து விவாஹ ரத்து மசோதா—ப்ரஹ்ம ஸ்ரீ. வித்வான் டி. எஸ். நடேச சாஸ்திரிகள், மாயவரம் 265
3. மங்கை மன்னன் மறம்—ஸ்ரீமந் நாதமுனிகள் சன்னிதி, திரு. அ. இராம க்ருஷ்ண சடகோப தாஸர் 272
4. விவாக வயது மசோதா—நாச்சியார் கோவில் வித்வான் அபிநவ ஸரஸ்வதி குருவர்ய நடாதூர் ஸ்வாமி க்ருஷ்ணமாசாரியர் 279
5. பத்ராதிபரின் குறிப்புகள்:— 283
6. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ உ.ப. வாஸுதேவாசார்யர் ... 161
7. ஜிதந்தே ஸ்தோத்ரம்:—ஸ்ரீ. உ.ப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் 65

வேதாந்த தீபிகை.

வேதாந்த தீபிகை பத்ரிகை ஸம்பந்தமான கடிதங்கள் ஸம்பாதகர் ஸ்ரீ வாஸுதேவாசார்யர் மாம்பலம், சைதாப்பேட்டை போஸ்டு என்ற விலாஸத்திற்கும்

மற்றக் கடிதங்கள் சந்தா முதலியவை ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி சென்னை என்ற விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

மெடல்கள் பெற்றதும், ரிஜிஸ்டர் நெ. 329, உன்னதமான,

எப்பொழுதும்

C. B. S. ராவின் சர்பத்துகளையே

உபயோகியுங்கள்.

குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடியது. உண்மையானது. உத்திரவாதமுள்ளது.

நன்னாரிவேர் புட்டி ரூ. 1—8	லெமன் ,, ,, 1—8	பாதாமி ரூபா
அஞ்சி ,, ,, 1—8	ரோஜா ,, ,, 1—12	1—12.

குழந்தைகளுக்கான கைகண்ட மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை (100 கொண்ட) புட்டி 1-க்கு 12 அணா.
கஸ்தூரி மாத்திரை ,, ,, 8 அணா.

வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

தயாரிப்பவர்:—

C. B. ஸ்ரீநிவாஸ ராவ், ஆயுர்வேத வைத்யர்,
92, வெங்கடாசல முதலி தெரு, மீர்சாஹிப்பேட்டை,
ராயப்பேட்டை, P. O. மதராஸ்.

ஸ்ரீ :

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18] விபவ ஸூ, ஆடி மீ [ஸஞ்சிகை 10

ஸ்ரீ ஹ்வதகஉதம் தஉாவணஉம் ஈவிகா மளாவராம்பாம் உயாதெ ।
வவாஈஉகக்ஷாவரதாநநாபெ விஜயஸவெ ஈதிரஷ்ர உஉநவக்ஷா
[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே ராஜமொவாயஷாஉிஉெ நம: ॥

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை.

[ஸ்ரீ. உப. வித்வான் முடும்பி க்ருஷ்ணமாசார்யர், மன்னார்குடி.]

ஜநஉஜிஜீவயிஷயா விநிஉிஉதாமு
ஸ்ராதிஉளஸிமஉஉவாஉாயஉபெயாயிநீமு ।
ஃமாஉவஷெபஸாமஉாம் ஸாயீஸிதாமு
வஹிதாம் ஸஉீக்ஷ்ய உஷிதொஷவக்ரகாமு ॥ 1.

[சென்ற ஸஞ்சிகையில் ப்ரகாசிப்பிக்கப் பட்டிருந்த ஸ்ரீ. உப. வித்வான் காரப்பங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமியின் பத்ரிகையைக் கடாக்ஷித்து, மன்னார்குடி முதலியார் அவர்கள் பாடசாலையில் ஸம்ஸ்க்ருத உபாத்யாயராக இருக்கும் ஸ்ரீ. உப. வித்வான் முடும்பி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, கலிமஹிமையினால் ஜகத்திற்கு ஸம்பவிக்கும் க்ஷோபத்தைத் தாம் ஒரு தினம் அநுசிந்தநம் செய்து அதனால் கேதத்தை அடைந்தவராய், அப்பொழுது தாம் சில ச்லோகங்களை இயற்றினதாகவும், அவை ஸ்ரீ வேங்கடாசார்ய ஸ்வாமியின் பத்ரிகையுடன் துல்ய விஷயமாயிருக்கிறபடியால் தீபிகையில் ப்ரகாசிப்பிக்க அர்ஹங்களென்றும் நியமித்து, அவைகளை நமக்கு அனுப்பியிருக்கிறார். நாம் மிக்க ஸந்தோஷத்துடன் அவைகளை இவ்விடத்தில் ப்ரகாசிப்பிப்பதுடன், ஸம்ஸ்க்ருத பாஷை அறியாத நமது ஸஹ்ருதுக்களும் அவைகளின் ரஸத்தை அநுபவிக்க வேண்டுமென்று கருதி, அவைகளின் கருத்தை யதாசக்தி தமிழில் மொழிபெயர்த்திருக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகன்.]

186286.

[illegible]

[illegible]

[illegible] 3.

[illegible] 4.

[illegible] 5.

[illegible] 6.

[illegible] 7.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 10.

[ஜகதுபகாரகமாக ப்ரசுரம் செய்யப்பட்டு வரும் 'ஸ்ரீவேதாந்த தீபிகை'என்னும் பத்ரிகையைப் பார்த்து நாம் மிகவும் ஸந்தோஷிக்கிறோம். இந்தப் பத்ரிகை, வேதாந்தங்களுள் நிகூடங்களாக இருக்கும் ஸூக்ஷ்ம விஷயங்களை, ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநம் இல்லாதார்க்கும் எளிதில் விளங்கும்படி தமிழ்ப் பாஷையில் ப்ரகாசிப்பித்துக்கொண்டு வருகிறது. இது உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகவேண்டு மென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரவர்த்தகராயும், சாந்தி முதலிய அநேக கல்யாண குணங்களுடையவராயும், ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நராயும் இருக்கும் வித்வாங்களுக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம். அது அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயமாக இருக்கலாம். அப்படிக்கிருந்த போதிலும், வஸ்து ஸ்திதியை நிஷ்பக்ஷபாதமாக எடுத்து உரைத்தல் வேண்டும் என்னும் எண்ணமே இந்த விண்ணப்பத்தில் ப்ரவ்ருத்திப்பதற்குக் காரணம், வித்வாங்கள் இது விஷயத்தில் விபரீத க்ரஹணம் செய்யக்கூடாதென்று ப்ரார்த்திக்கிறோம்.

அத்வைதம் முதலிய மதங்களை அநுஸரிப்பவர்களுக்கும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், தம் தம் மதத்தை ஸ்தாபிக்கும் விஷயத்தில் பஹு காலமாக பரஸ்பரம் ஸ்பர்த்தை இருந்துகொண்டு வருகின்றது என்பது ப்ரஸித்தம். அதை ஒருவாறு பொறுத்தாலும் பொறுக்கலாம்; ஸ்ரீராமாநுஜன் ஒருவனையே முக்ய ஆசார்யனாகக் கொண்டாடும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஏதோ சில ஸ்வல்ப அபிப்ராய பேதம் காரணமாகப் பரஸ்பரம் கலஹம்

ஏற்படுகின்றது என்பது ஸர்வதா பொறுக்கத் தக்கது அன்று. அது கலியின் கொடுமையே. லோகத்தில் வேறு மதஸ்தர்களுள் இம்மாதிரி புண்ட்ரதாரண விஷயமாகவும், ஆலயங்களில் முதல் தீர்த்த விஷயமாகவும், கலஹம் ஏற்படுகின்றது என்பது ஒரு இடத்திலும் காணப்படவில்லை. நமக்குள் மாத்ரம் இம்மாதிரி ஸ்பர்த்தை ஏற்பட்டிருக்கின்றது. கலியின் கொடுமையே இதற்குக் காரணமென்று நாம் நினைக்கிறோம். முதலில் ஸ்ரீராமானுஜ தாஸர்களுள் புண்ட்ரதாரண விஷயமாகத் தென்கலை என்றும் வடகலை என்றும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன; பிறகு வடகலையாருள் ஆசார்ய பேதத்தை முன்னிட்டு முநித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்களென்றும் மடத்து ஸம்ப்ரதாயஸ்தர்களென்றும் இரண்டு அவாந்தர பேதங்கள் ஏற்பட்டன. ஏற்பட்டாலென்ன? அவர்களுக்குள் பரஸ்பரம் ஸௌஹார்த்தம் குறையவேண்டுமோ? கலஹம் உண்டாகி வ்ருத்தி யடையவும் வேண்டுமோ? ஸர்வஜ்ஞனாகவும் கருணாநிதியாகவும் இருக்கும் சரண்யன், தனது திருவடிகளையே உபாயமாகப் பற்றினோரெல்லாரையும் நிஷ்பக்ஷபாதமாக ரக்ஷிக்கிறானன்றோ? அப்படி உபாயமாகப் பற்றுவதில் ப்ரகார பேதங்களைக் கொஞ்சமாவது அவன் பார்ப்பனே யாகில், எவர்கள் தாம் யதாவத்தாக ப்ரபத்தி செய்து மோக்ஷத்தை அடையக் கூடும்? யதாவத்தாக ப்ரபதநம் செய்வது என்பது எப்படிப்பட்ட ஜ்ஞானிக்கும் அஸாத்யமன்றோ? இக்காலத்தில ப்ராஹ்மணர்களைக் கண்டால் எல்லாரும் ப்ராயேண த்வேஷிக்கிறார்கள்; ப்ராஹ்மணர்கள் பெரியோர்கள் என்பதை ஒருவரும் அங்கீகரிக்கிறாரில்லை. இப்படி அந்யர்கள் தம்மை த்வேஷிக்கிறார்கள் என்பதை இவர்கள் அறிந்திருந்தும், தமக்குள் எவ்வித ஸௌஹார்த்தமுமின்றிக்கே பரஸ்பரம் நிந்தித்துக்கொண்டு க்ரந்தங்களை எழுதி வருகிறார்களே! இது உசிதமாகுமோ? தம்தம் ஆசார்யர்கள் காண்பித்திருக்கும் வழி தம் தமக்கு உபாதேயம்; அந்த வழியில் சென்றால் சரண்யன் நிச்சயம் நம்மை ஸம்ரக்ஷிப்பன். 'சாஸ்த்ரம் படித்ததன் பலம் சாந்தி என்னும் குணம்' என்று மற்றோர்க்கு உபதேசம் செய்துகொண்டே, ப்ரஹ்ம வித்துக்களாயிருப்பவர்கள் கூட, மற்றெல்லா விஷயங்களிலும் சாந்தர்களாக இருக்கையிலும், வாதி விஜயம் செய்யும் விஷயத்தில் சாந்தியற்றவர்களாகவே இருக்கிறார்கள், இப்பொழுது சிலர் தமது வைதுஷ்யத்தைக்கொண்டு தமது எதிராளிகள் சரணாகதி விஷயத்தைப் பற்றி சொல்லும் உக்திகளில் கணக்கற்ற தோஷங்களை எடுத்து உரைத்து, தாம் எழுதியிருக்கும் க்ரந்தங்களை ப்ரகாசநம் செய்து கொண்டு அதனால் பெருத்த ஸந்தோஷத்தை அடைகிறார்கள். இது என்ன ஆச்சர்யம்? தமது ஜ்ஞாநத்தை வெளியிடவேண்டும் என்று இவர்களுக்கு அபிநிவேசம் இருக்குமாகில், லோகத்தில் கடிநங்களான காவ்யங்களும் சாஸ்த்ரங்களும் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. அவைகளை வ்யாக்யாநம் செய்வதில்

இவர்கள் தமது சக்தியை உபயோகப்படுத்தினால் ஜகத்திற்கு அதிமாத்ரம் உபகாரமாக இருக்கும்; தம்முடைய ப்ரஜ்ஞையும் ப்ரஸித்தி அடையும்; ஒருவரையும் தூஷித்ததாக மாட்டாது.]

—:o:—

ஸ்ரீ:

ஹிந்து விவாஹ ரத்து மசோதா:

[ப்ரஹ்மஸ்ரீ. வித்வான் டி. எஸ். நடேச சாஸ்த்ரிகள், மாயவரம்.]

இப்பெயர் வாய்ந்த மசோதா ஒன்று 22—3—28-ல் டாக்டர் ஹரிஸிங் கவர் என்பவரால் டில்லி அகில இந்திய சட்ட ஸபையில் கொண்டுவரப்பட்டு, இதைச் சட்டமாகச் செய்யும் விஷயத்தில் ஹிந்துக்களின் அபிப்ராயத்தை அறிந்து தெரிவிக்கும்படி ஜில்லா கலெக்டர்களுக்குக் கவர்ன்மெண்டார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

விவாஹமானவன் நபும்ஸகனாகவாவது, சித்த ஸ்வாதீநமில்லாதவனாகவாவது, குஷ்டரோகியாகவாவது இருந்தால் விவாஹத்தை ரத்து செய்துகொண்டு, அவன் மனைவி அவனை விட்டு விலகிக்கொள்ளப் பாத்யம் கொடுக்கப்படவேண்டுமென்பது இம்மசோதாவின் கோரிக்கை.

இம்மசோதாவிற்கு அநுகூலமாக டாக்டர் கவர் கூறும் காரணங்கள்:—"இந்து சட்ட ப்ரகாரம் விவாஹத்தின் முக்ய நோக்கம், ஒரு ஆண் பிள்ளை பெறுவது. புருஷன் நபும்ஸகனாகவாவது, பைத்தியம் பிடித்தவனாகவாவது இருந்தால் மனைவி ஒருவனுடன் சேர்ந்து பிள்ளை பெற நியோகம் என்ற ஏற்பாடிருந்து வந்தது; அது இப்பொழுது அநுஷ்டாநத்தில் இல்லை; நியோகம் என்பதை அவள் அநுஸரிக்க முடியாத நிலைமையில் அவள் கௌரவமாக நடந்துகொள்வதற்கு இருக்கும் ஒரே வழி, அப்படிப்பட்ட விவாஹத்தை ரத்து செய்துகொள்வதுதான். தவிர, மேற்சொல்லிய வ்யாதிகளால் பீடிக்கப்பட்டவனுக்கும் அவன் மனைவிக்கும் சொத்துக்களில் எவ்வித பாத்யமுமில்லை. ஆகையால் இம்மசோதா மனைவிக்கு ஸ்பஷ்டமாய்க் கிடைக்கவேண்டிய பாத்யதையைக் கொடுப்பதாக ஆகும். இந்த மசோதாவின் நோக்கம், ஹிந்து விவாஹங்களில் எவ்வித மாறுதலையும் உண்டாக்கவேண்டுமென்றல்ல. இது சட்டமாக ஏற்பட்டால் நாரத ஸ்ம்ருதி

வஸிஷ்ட ஸ்ம்ருதிகளில் சொல்லிய புராதந வழக்கத்தை இப்பொழுது அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவருவதாக ஆகும்.''

டாக்டர் கவர் கூறும் ஸ்ம்ருதி வசநங்கள்:—

நாரத ஸ்ம்ருதி 12-வது அத்யாயம்.

ஆக்ஷிப்தமோஹபீஜாநாம் க்ருதேऽபி பதிகர்மணி ।
பதிரந்ய: ஸ்ம்ருதோ நார்யா வத்ஸராத்ஸம்ப்ரதீக்ஷ்ய து ॥ (ச்லோ. 16)

[ஆக்ஷிப்தன் (ரேதஸ்ஸை அடக்கி வருவதால் போக சக்தி குறைந்தவன்), மோக பீஜன் (கர்ப்பந் தரிப்பதற்குரிய வீர்யமற்ற ரேதஸ்ஸையுடையவன்), இவ்விரு நபும்ஸகர்களையும் கணவனாக அடைந்த ஸ்த்ரீகள் ஆறு மாஸம் பரீக்ஷித்துப் பார்த்தும் ப்ரயோஜநப் படாவிட்டால், வேறு புருஷனை விவாஹம் செய்துகொள்ளலாம்].

அபத்யார்த்தம் ஸ்த்ரிய: ஸ்ருஷ்டா: ஸ்த்ரீ க்ஷேத்ரம் பீஜிநோ நரா:।
க்ஷேத்ரம் பீஜவதே தேயம் நாபீஜ: க்ஷேத்ரமர்ஹதி ॥ (ச்லோ. 19)

[ப்ரஜோத்பத்திக்காக ஸத்ரீகள் ஸ்ருஷ்டிக்கப்பட் டிருக்கிறார்கள். ஸ்த்ரீ / க்ஷேத்ரம் (பூமி), புருஷன் விதையை யுடையவன். விதையை யுடையவனுக்கு க்ஷேத்ரம் கொடுக்கப்பட வேண்டும். விதையில்லாதவனுக்கு க்ஷேத்ரம் கொடுக்கப்படாது.]

ப்ரதிக்ருஹ்ய து ய: கந்யாம் வரோ தேசாந்தரம் வ்ரஜேத் ।
த்ரீந்ருதூந் ஸமதிக்ரம்ய கந்யாந்யம் வரயேத் வரம் ॥ (24)

[ஒரு பெண்ணை நிச்சயம் செய்துவிட்டு வெளியூர் சென்றவன் திரும்பி வராவிட்டால், ஆறு மாஸம் காத்திருந்து, அதற்குப் பிறகு வேறு புருஷனை விவாஹம் செய்துகொள்க.]

ச்லோகம் 37. [நாரத ஸ்ம்ருதி ஸம்ஸ்க்ருதம் கல்கத்தாவில் ஏஷியாடிக் ஸொஸைடியாரால் 1885-86-ல் நாகர லிபியில் ப்ரசுரம் செய்யப்பட்டது. இப்பொழுது அப் புஸ்தகம் கிடைக்காதபடியால் இதன் தமிழ் அர்த்தம் மாத்ரம் இங்கு குறிப்பிடப்படுகிறது.]

பைத்தியம் பிடித்தவன், ஜாதி ப்ரஷ்டன், நபும்ஸகன், கஷ்டப்பட்டுக்கொண் டிருப்பவன், பந்துக்களால் விடப்பட்டவன், அபஸ்மார வ்யாதியுள்ளவன், அங்கஹீநன் இவைகள் வரனுடைய தோஷங்கள்,

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ ।
பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரந்யோ விதீயதே ॥ (ச்லோ. 97)

[நிச்சயிக்கப்பட்ட புருஷன் காணாமற் போய்விட்டாலும், இறந்துவிட்டாலும், ஸந்யாஸம் பெற்றுக்கொண்டாலும், நபும்ஸகனென்று தெரிந்தாலும், ஜாதி ப்ரஷ்டனாகி விட்டாலும் இந்த ஐந்து ஆபத்துக்களிலும் ஸ்த்ரீகளுக்கு வேறு புருஷன் விதிக்கப்படுகிறது.]

வஸிஷ்ட ஸ்ம்ருதி அத்யாயம் 17-ல் வசநம் 20:—

யா ச க்லீபம் பதிதமுந்மத்தம் வா பர்த்தாரமுத்ஸ்ருஜ்யாந்யம் பதிம்
விந்ததே ம்ருதே வா ஸா புநர்பூர் பவதி ॥

[நபும்ஸகன் ஜாதி ப்ரஷ்டன் அல்லது பைத்யம் பிடித்த கணவனை விட்டுவிட்டாவது, அல்லது கணவனிறந்த பிறகாவது வேறு புருஷனை அடைகிறவள் புநர்ப்பூ (மறுபடியும் மனைவியாக ஆனவள்) என்று சொல்லப்படுகிறாள்.]

இதற்கு நமது ஸமாதாநம்:—ஹிந்து மதம் வேதத்தை ஆதாரமாக வுடையது. வேதம் அநாதி யென்பதும் அபௌருஷேய மென்பதும் ஹிந்துக்களின் துணிபு. வேதத்திற்கு அடுத்த ப்ரமாணம் ஸ்ம்ருதிகள். ஸ்ம்ருதிகள், ஈச்வராம்சம் பெற்ற மநு, யாஜ்ஞவல்க்யர், பராசரர் முதலிய மஹர்ஷிகளால் வேதத்தை யநுஸரித்து வெளியிடப்பட்டுப் பரம்பரையாய் அநுஷ்டாநத்தி லிருந்து வருகின்றன.

ஸ்ம்ருதிகளில் முதன்மை பெற்றது மநு. க்யாதி பெற்ற குல்லூக பட்டர், தாம் செய்த மநு ஸ்ம்ருதி வ்யாக்யாநத்தில், முதலாவது அத்யாயம் முதல் ச்லோகத்தின் வ்யாக்யாநத்தில், "மநு, வேதத்தின் கருத்தை வெளியிடுவதால் முதன்மை பெற்றது. மநுவின் கொள்கைக்கு விரோதமான எந்த ஸ்ம்ருதிகளும் கௌரவிக்கத் தக்கவையல்ல; இதர சாஸ்த்ரங்களும் தர்க்க வ்யாகரணங்களும் தர்மம் அர்த்தம் மோக்ஷத்தை உபதேசிக்கும் மநு ஸ்ம்ருதிக்கு அநுகூலமானவரையில் மட்டுந்தான் ப்ரமாணங்கள்'' என்று ப்ருஹஸ்பதி ஸ்ம்ருதியிலிருந்து இரண்டு வசநங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி முதல் அத்யாயம் ச்லோகங்கள் 4, 5-லும், பராசர ஸ்ம்ருதி முதல் அத்யாயம் ச்லோகங்கள் 12-15 வரையிலும் சொல்லியிருக்கும் முக்ய ஸ்ம்ருதிகளின் பெயர்களில் நாரத ஸ்ம்ருதி காணப்படவில்லை.

டாக்டர் கவர் நாரத ஸ்ம்ருதி வசநங்களின் மொழிபெயர்ப்புக்களை ஜுலியஸ் ஜால்லி என்பவர் செய்த இங்க்லீஷ் மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்துக் கூறுகிறார். ஜுலியஸ் ஜால்லி நாரத ஸ்ம்ருதியை உபஸ்ம்ருதி என்ற பிரிவில் சேர்த்திருக்கிறார்.

டாக்டர் கவர், தாம் கூறிய ஸ்ம்ருதி வசநங்கள் ஸ்த்ரீ புருஷன் விவாஹம் செய்துகொண்ட பிறகு புருஷனிடத்தில் காணப்படும் தோஷங்களைப் பற்றிச் சொல்வதாக அபிப்ராயப்படுகிறார்; அது முற்றிலும் தவறு.

நாரத ஸ்ம்ருதி அத்யாயம் 12, ச்லோகங்கள் 19, 37, 97 இந்நான்கும் ஒரு வரனைத் தேர்ந்தெடுப்பதில், வரனிடத்தில் மேற் சொல்லிய தோஷங்கள் இல்லாமலிருக்கவேண்டு மென்றும், விவாஹ பூர்த்தியாகிய ஸப்தபதி (அம்மி மிதித்தல்) க்கு முன் வரனிடத்தில் இவ்வித தோஷங்களிருப்பனவாகத் தெரிய வந்தால் அந்த வரனை நீக்கி வேறு வரனுக்குப் பெண்ணை விவாஹம் செய்விக்கவேண்டுமென்றும் கூறுகின்றன.

ஷை ச்லோகம் 24, ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொள்வதாக நிச்சயித்து, அதற்காகக் கந்யா சுல்கம் (பரிசம்) கொடுத்துவிட்டு, தேசாந்தரம் போன வரன் குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வந்து கல்யாணம் செய்து கொள்ளாததைப் பற்றிச் சொல்லியது.

ஷை ச்லோகம் 16-இந்த ச்லோகத்தில் சொல்லியது யுகாந்தர விஷயம். வ்யாஸர்:—

ஊடாயா: புனருத்வாஹம் ஜ்யேஷ்டாம்சம் கோவதம் ததா ।
கலௌ பஞ்ச ந குர்வீத ப்ராத்ருஜாயாம் கமண்டலும் ॥

[ஒரு தடவை விவாஹமானவளை மறுமுறை விவாஹம் செய்வது, ஸந்ததியில்லாத ஸஹோதரன் மனைவியிடம் புத்ரனை உண்டுபண்ணுவது (நியோகம்), முதலியன கலியுகத்திற்குத் தகாதவை.]

வஸிஷ்ட ஸ்ம்ருதி அத்யாயம் 17, ச்லோகம் 20—இதில் சொல்லிய விஷயமும் ஸப்தபதிக்கு முன் வரனிடத்தில் இவ்வித தோஷங்கள் கண்டு பிடிக்கப்பட்டால், அந்த வரனை நீக்கிவிட்டு, வேறு வரனுக்குப் பெண்ணை விவாஹம் செய்விக்கலாம் என்பதைக் கூறுகிறது. போதாயந ஸூத்ரம்:—

வாசா தத்தா மனோதத்தா அக்னிம் பரிகதா ஸப்தமம் பதம் நீதா
புக்தா க்ருஹீதகர்பா ப்ரஸூதா சேதி ஸப்தவிதா புனர்பூ:

மேலே சொல்லியபடி புனர்ப்பூ ஏழு வகை. இதில் "ஸப்தமம் பதம் நீதா" என்பதற்கு முந்தின மூன்று புனர்ப்பூக்களுக்கும் விவாஹம் செய்விக்கலாம். பெண்ணைப் பலாத்காரமாய்க் கொண்டுபோய் விவாஹம் செய்வித்திருந்தாலும், ஸப்தபதி க்ரியை பூர்த்தியாகிவிட்டால், அவைகளை மறுபடி வேறு வரனுக்கு விவாஹம் செய்விக்கக்கூடாது. (பம்பாயில் 1904-ம் வருஷத்தில் ஜநார்த்தந மஹாதேவ குர்ஜர சர்மா என்பவரால் ப்ரசுரிக்கப்பட்ட "காசிநாதோபாத்யாயர் இயற்றிய தர்மஸிந்து"வில் பக்கம் 170 பார்க்கவும்.)

விவாஹத்தின் முக்கிய நோக்கம், புருஷன் ஒரு கந்நிகையை விவாஹம் செய்து க்ரஹஸ்தாச்ரமத்தில் மதஸம்பந்தமான கடமைகளைச் செய்வது. (மநு. அத். 3, ச்லோ. 80, 81.)

ஒரு புருஷ ப்ரஜையை உத்பத்தி செய்வதென்பது அதன் அடுத்த நோக்கம் இது புருஷனுக்குத் தான் விதிக்கப்பட்டிருக்கின்றது. (மநு அத். 3. ச்லோ. 37, 38, அத். 9, ச்லோ. 81.)

கணவன் ஜீவித்திருந்தாலும் இறந்தாலும் ஒரு புருஷ ப்ரஜையை உண்டுபண்ணிக்கொள்ள வேண்டுமென்று ஸ்த்ரீக்கு விதிக்கப்படவே இல்லை. கணவன் ஜீவதசையிலிருக்கும்வரையில் ஸ்த்ரீ அவனைத்தெய்வமாக நினைத்து இடைவிடாது சுச்ரூஷை செய்வதும், அவன் இறந்தால் அவள் ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்றும் கண்டிப்பாய் விதிக்கப்பட்டிருக்கிறது. (மநு அத். 5, ச்லோ. 154—160.)

ஸ்த்ரீ கணவனை உதாஸீநம் செய்து, வ்யபிசாரத்தால் ஒரு புருஷ ப்ரஜையை அடைவதும், வேறு ஒருவனை விவாஹம் செய்துகொள்வதும் கூடா; இவற்றினின்றும் ஸ்த்ரீகள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். (மநு, அத். 5, ச்லோ. 161, 162)

கணவனை உதாஸீநம் செய்து வ்யபிசாரம்செய்யும் ஸ்த்ரீ இஹத்திலும் நிந்திக்கப்பட்டு, இறந்தபின் குள்ளநரியாகப் பிறந்து, அநேக அபஸ்மார ரோகங்களையும் அநுபவிப்பாள். (மநு, அத். 9, ச்லோ. 30.)

கணவன் தன் ஸ்த்ரீயை விற்றுவிட்டாலும் விட்டுவிட்டாலும், ஸ்த்ரீ கணவனிடமிருந்து விடுபட்டவளல்லள் என்பது ப்ரஹ்மாவால் ஆதி காலத்திலேயே ஏற்படுத்திய விதி. (மநு, அத். 9, ச்லோ. 46.)

வேதம், ஸ்ம்ருதி, ஸாதுக்களுடைய ஆசாரம், தனது அந்தராத்மாவின் த்ருப்தி, இந்நான்கும் தர்மத்தின் லக்ஷணம். (மநு, அத். 2, ச்லோ. 12.)

இன்னும் இவைபோன்ற எண்ணிறந்த ப்ரமாணங்கள் இதர ஸ்ம்ருதிகளிலும் ஸ்ரீமத் ராமாயண மஹாபாரதங்களிலும் காணப்படுகின்றன.

மநு ஸ்ம்ருதி அத்யாயம் 9, ச்லோகங்கள் 64 முதல் 68 வரையில் நியோகம் என்பது என்னவென்று விவரிக்கப்பட்டும், அது கூடாதென்று கண்டிக்கப்பட்டு மிருக்கிறது. "நியோகத்தை விதிப்படி அநுஷ்டிப்பதற்கு முன் யுகங்களில் மனிதர்கள் தபஸ்ஸோடும் ஜ்ஞாநத்தோடுங் கூடியிருந்தார்கள். புராதந ரிஷிகளால் புத்ரர்கள் பலவிதமாக உத்பத்தி செய்யப்பட்டிருக்கிறார்கள். கலியுகத்தில் மனிதர்களுக்கு அவ்வித சக்தி யில்லாததால் நியோகம் கூடாதென மநுவே தடை செய்திருக்கிறார்" என்ற அர்த்தங் கொண்ட மூன்று ச்லோகங்களை ப்ரஹஸ்பதி ஸ்ம்ருதியிலிருந்து, குல்லூக பட்டர், ராகவாநந்தர், நந்தநர் இம் மூவரும் ௸ 68-வது ச்லோகத்திற்குத் தாங்கள் செய்த வ்யாக்யாநங்களில் குறிப்பிட் டிருக்கிறார்கள்.

நியோகம் நடைபெற்ற காலத்தில் சொல்லப்பட் டிருக்கும் நிபந்தனைகளையும் டாக்டர் கவர் இப்பொழுது தமது மசோதாவில் கேட்பதையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்:—

(1) த்விஜாதி ஸ்த்ரீகளுக்குப் புருஷன் இறந்த பிறகுங் கூட நியோகம் கூடாதென விதிக்கப்பட் டிருக்கிறது. டாக்டர் கவர், புருஷன் ஜீவதசையி லிருக்கும்பொழுதே எல்லா ஜாதி ஸ்த்ரீகளுக்கும் விவாஹத்தை ரத்து செய்துகொண்டு கௌரவமாய் நடத்திக்கொள்ள வேறு ஒருவனை விவாஹம் செய்யச் சட்டம் கேட்கிறார்.

(2) நியோகத்தில், ஸந்ததியில்லாமல் வம்சம் சூந்யமாவதாக இருந்தால், சில நிபந்தனைகளுக் குட்பட்டு, இறந்துபோன கணவனின் ஸஹோதரன் அல்லது ஸபிண்டர்களி லொருவன் பெரியோர்களுடைய உத்தரவின் பேரில் ருதுகாலத்தில் சேர்ந்து ஒரே ஒரு ப்ரஜையை உண்டுபண்ணுவது. டாக்டர் கவர், ஸ்த்ரீகள் எவ்வித நிர்ப்பந்தத்திற்கு முள்ளாகாமல் தனக்கிஷ்டமானவனுடன் கூடி பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்கொண்டு ஸுகமாய் வாழ்ந்துவரச் சட்டம் கேட்கிறார்.

மேலே குறிப்பிட்ட மநுஸ்ம்ருதி வசநங்களின் முன்னிலையில், டாக்டர் கவர் தம்முடைய மசோதாவுக்கு அநுகூலமென நினைத்துக் கூறிய நாரத ஸ்ம்ருதி வஸிஷ்ட ஸ்ம்ருதி வசநங்களும் மசோதாவில் கண்ட காரணங்களும், ஆடிக் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சின் கதியை அடைந்து விட்டன.

இந்த மசோதா, ஹிந்து மத சாஸ்த்ரங்களுக்கும் அநுஷ்டாநங்களுக்கும் முற்றிலும் விரோதமானதாலும், ஸ்த்ரீ புருஷர்களுக்குள் ஒற்றுமைக்

குறைவையும் ஜநங்களுக்குள் கலஹத்தையும் விளைவிக்கக்கூடியதாகவு மிருப்பதால், இதைக் கவர்ன்மெண்டார் அடியோடு தள்ளிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

தற்காலம் டில்லி அகில இந்திய சட்ட ஸபையின்முன் நிற்பன: 1. மிஸ்டர் ஹர்பிலாஸ் ஸர்தா என்பவரால் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹ வயது மசோதா (The Child Marriage Bill), 2. ஹிந்து ஸ்த்ரீகளின் சொத்து உரிமை மசோதா (The Inheritance Right of Hindu Women Bill), 3. ஸர் ஹரிஸிங் கவர் கொண்டுவந்திருப்பது ஸம்போக வயது நிர்ணய மசோதா (Age of Consent Bill), 4. ஹிந்து விவாஹ ரத்து மசோதா (The Hindu Marriages Dissolution Bill) ஆக மொத்தம் நான்கு. மிஸ்டர் ஸர்தா, டாக்டர் கவர் இவ்விருவரும் டில்லி சட்ட ஸபைக்கு ஜநங்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மெம்பர்கள். இவர்கள், ஜநங்கள் அபேக்ஷிக்காததும் பெரும்பான்மையோரால் ஆக்ஷேபிக்கப்படுகிறதுமான இம்மசோதாக்களைக் கொண்டுவந்து, ஜநங்களின் மனத்தைப் புண்படுத்தி, இம்மசோதாக்களில் ஸம்பந்தமில்லாத ராஜாங்கத்தாரிடத்தில் ஜநங்களுக்கு வெறுப்பையும் கோபத்தையும் விருத்தி செய்து வருகிறார்கள். 'இந்த மசோதாக்களை உங்கள் ப்ரதிநிதிகள் கொண்டுவந்திருக்கிறார்களே யன்றி நாங்கள் காரணமல்ல' என்று கவர்ன்மெண்டார் ஜனங்களுக்குப் பதில் சொல்லக்கூடும். அகில இந்திய சட்ட ஸபையும் மாகாண சட்ட ஸபைகளும் ஏற்பட்டது ராஜீய விஷயங்களை நிதானிப்பதற்கே யொழிய, மத ஸம்பந்தமான விஷயங்களில் தலையிடுவதற்கல்ல. மசோதாக்களை அங்கீகரிக்கவும் தள்ளிவிடவும் அதிகாரம் ராஜாங்கத்தாரிடமே இருக்கிறபடியால், இந்த மசோதாக்களை முதலெடுப்பிலேயே ராஜாங்கத்தார் அங்கீகரிக்காமல் தள்ளியிருந்தால், தேசமெங்கும் இவ்வித மனக்குழப்பத்துக்கு இடமிராதென்று ஜனங்கள் ராஜாங்கத்தார்மீது குறை கூறுகிறார்கள். இம்மசோதாக்களை இப்பொழுதாவது ராஜாங்கத்தார் அடியோடு தள்ளி, இனியும் இவ்வித மத ஸம்பந்தமான மசோதாக்களைச் சட்ட ஸபைகளில் அங்கீகரிப்பதில்லை யென்று ஒரு சட்டத்தைச் சாச்வதமாய் ஏற்படுத்தி, கனம் விக்டோரியா மஹாராணியாரவர்களின் வாக்குறுதியை நிறைவேற்றி, ஜனங்கள் ராஜாங்கத்தாரிடத்தில் பூர்ண விச்வாஸம் பாராட்டும்படி செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மங்கை மன்னன் மறம்.

[ஸ்ரீமந் நாதமுனிகள் சந்நிதி, திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸன்.]

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

(பெரிய திருமொழித் தனியன்.)

'மங்கை மன்னன் மறம்' என்பது திருமங்கையாழ்வாரது திவ்ய ப்ரபாவத்திற் போதருகின்ற வீரச் செயல்களைச் சுருக்கி நான்கு பகுதிகளாக்கி, ஒவ்வொரு பகுதிக்கும் 'மறம்' எனப் பெயர் தந்து, அவ்வம் மறத்தைப்பற்றி யாராய்வதாம். மறம் என்பது வீரம் எனப் பொருள் படுவதாகலின், இஃது, திருமங்கை மன்னர் தங்குன்றா வீரவலிபாற் செய்தருளிய வீர வெற்றி வரலாறுகளை எடுத்தியம்புகின்றது. அத்தகைய வீர வெற்றிகள் நான்கு. அவை வருமாறு:—

முதன் மறம்: கோச்செங்கட் சோழனை வெற்றிகொண்ட வரலாறு; இரண்டாம் மறம்: வாள்வலியாலே மாயோன்பால் மந்திர முணர்ந்த வரலாறு; மூன்றும் மறம்: ஞான சம்பந்தரை வென்று அவர்தம் வேலைவாங்கிய வரலாறு; நான்காம் மறம்: திருவரங்கத் திருப்பணி வேலை செய்த வரலாறு.

இவற்றுண் முதன் மறமாவது:

மங்கை மன்னர், தமது தேவியார் குமுதவல்லியார் பொருட்டு நாடோறும் ஆயிரம் பாகவதர்கட்கு அன்னம் இடவேண்டித் தம் கையில் உள்ள பொருள் எல்லாவற்றையும், தம் குடிகள் செலுத்துகின்ற பகுதிப் பணத்தில், அப்போது உறையூறைத் தலை நகராக்கிச் சோணாடாண்ட கோச்செங்கட் சோழனுக்கு ஒரு பைசா அளவுங் கட்டணஞ் செலுத்தாது, அப்பகுதிப் பணம் எல்லாவற்றையும் பாகவத கைங்கர்யத்திற்குச் செலவிட்டு வருவாராயினர். மூன்றாண்டுகாறுங் காத்தும், மங்கை நாட்டுக் கப்பத்தொகை வாராதது கண்டு, சோழன் மங்கையர் கோனுக்குச் செய்தி யனுப்பினன். அச்செய்தி கொணர்ந்த அரச சேவகர்களை மங்கை மன்னர் எள்ளிப் போக விடுத்துத் தாம் தம் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். சோழவேந்தன், தன்னை மங்கை நாட்டரசன் எள்ளி நகையாடியதை அறிந்து பெருஞ் சீற்றங்கொண்டு, தன் சேனையெல்லாம் திரட்டிக் கொண்டுவந்து, மங்கையம்மரசைப் போருக் கழைத்தனன். மங்கைக்கோன், மூன்று நாள் ததீயாராதனத்துக்கு வேண்டிய சாமக்கிரிகளைத் தம் மந்திரிமார் வசம் ஒப்புவித்துப் பாகவதர்களை ஓம்பச் சொல்லி விட்டுத் தாம் சோழனோடமர் செய வெண்ணி, ஒரு சிலர் துணை கொண்டெதிர்த்தனர். என்னே! சோணாட்டுக் கதிபதியாய், பெருஞ்சேனைத் திரள் உடையனாய், பாண்டியனும் சேரனும் ஒருமிக்க எதிர்ப்பினும் தோலாத வலி பெற்றோனாய் விளங்கும் கோச்செங்கட் சோழ பூபதியை ஒரு சிலர் துணை கொண்டு தனித்த நம் மங்கை மன்னர் எதிர்ப்பரோ? முடியாது. என்றாலும், பாகவத கைங்கர்ய ப்ரீதராய், பகவானிடத்தில் களங்கமற்ற பேரன்பு படைத்தோராய் விளங்கும் அவரிடத்தில் இவ்வுலகமெல்லாம் திரண்டு வரினும், அங்ஙனம் வருதலானது, கனலிற்பட்ட பஞ்சுப் பொதியன்றோ! இத்தருணத்திலே நமது மங்கை நாட்டடிகளும் தம் முணர்வை நறையூரம் பகவன்பால் நாட்டியவராய், பாகவதர்கள் திருவடித் தூள்கள் எல்லாம் தமக்குச் சேனைத் திரளாய்க் கொண்டவராய், 'வெற்றி கொள்வோம்' என்ற ஓரே உறுதியோடு கூடிய வீரத்துடன் தாம் ஒருவர் மட்டில் போர்க்களத்தில் நின்று, தம்மை யெதிர்த்தாரை யெல்லாம் முறியடித்தோட்டினர். சோழனும் இவரது போர்த் திறத்திற் கஞ்சி உயிர் தப்பியவனாய் ஓடி மறைந்தனன். போர்க்களத்திலே, மங்கைவேந்தர் தங்குழாத்துடன் வாகைசூடி வெற்றி முரசார்த்து வீரவொலி செய்தனர்.

ரத கஜ துரக பதாதிகள் மிகுந்த சோழனது பற்பல்லாயிரம் வீரர்களை மங்கை மன்னர் யுத்தரங்கத்து நடுவண் போய் எதிர்த்து வெற்றிகொண்டது ஒரு பேர் ஆச்சரியமே. பாகவதாபிமானம் விஞ்சி அதனால் மனவலியேறிய மங்கை மன்னர், தம் உறுதிப்பாடாகிய ஓரே நினைவில் ஆழ்ந்திருந்தமையின், சோழனது பெருஞ் சேனைத் திரள் அவர்க்கொரு திருணமாயிற்று; சோழன் சைந்நியத்திற்குப் பெரு மரணமாயிற்று. பகவத் பக்தியினும் பாகவதாபிமானம் சிலாக்கியமான தென்பதற்கு இம்மறம் ஓர் எடுத்துக்காட்டு. இறைவனை நேசித்துப் பூசிப்போரைக் காட்டினும், அவன் அடியார் திறத்துப் பேரன்பு கொண்டொழுகுவோரே சிறந்தோ ரென்பது சாஸ்திரோக்தமும் உண்மையு மாதலின், ஆன்மாக்கள் பாகவதாபிமானங் கோடலே சிறப்புடைத் தாதலறிக. இந்நிலைமையே, மங்கை மன்னர் இறைவன்றன் திருவுருக் கோலத்தினை நேரிற்கண் டின்புறுதற்கு அடிப்படையாயிற் றென்பது அடுத்த மறம் பிரமாணமாக நிற்கின்றது.

இரண்டாம் மறம்.

திருமங்கை நாட்டடிகள் இவ்வாறு திருவடியார் கூட்டத்திற்கு நாடோறும் அன்ன மிட்டுவரவே, அவர்தங் கையில் இருந்த எல்லாப் பொருள்களும் செலவாயின. செலவாக அவர் மிகவும் வறியராய்த் திகைத்தார். தமது காதலியார் குமுதவல்லியாரிடத்துச் செல்லவும் அஞ்சி, ஏதொன்றும் உணராராகித் துயரப் பெருங்கடலில் ஆழ்ந்தவராய்த் துக்கித்துப் பின்னர் வழிபறித்துப் பொருளீட்டித் தாமேற்கொண்ட அறத்தாறு விடாது புரிதலே சற்கருமமாமென நினைந்து, தம் துணைவருடன் அத்தொழிற்கு மேம்படுவாராகி, இரவு முழுதும் பிறரைத் துன்புறுத்தல் செய்யாத இத்தொழிலால் எய்தப் பெறும் வருவாயினைக் கொண்டே திருவடியார் திருக்கூட்டத் திறம் பேணி வருவாராயினர். இவரது இச்செய்கை நாடெங்கும் பரவியது. இவரிடத்தில் எல்லாருக்கும் அச்சமும் மதிப்பும் உடன் றோன்றவே, சிலர், தம்மால் ஈயப்படும் பொருளையும் கொடுத்திவர்க் குதவினர்கள்.

இவர் மேற்கொண்ட களவுத் தொழில் நியாயந் தவறியதெனக் கருதப் படினும், உற்று நோக்குமிடத்து நியாயந் தவறாமை காணலாம். என்னை? பொருண் மிக்குடையோர், தம்பொருளால் அறவின்பத்தை யோராது அப்பொருள் மேன்மேலும பெருக மேன்மேலும் பொருடேடுவாராகலானும், தேடிய பொருண்மீதவர் வைத்த ஆசை ஆரா வியற்கை யாகலானும், அவ்வாசைதன் ஆராவியற்கை மாறிப் பேரா வியற்கையாம் பெருவீடு தருவதாகிய தூயதோர் ஆசைபால் அவர் மனஞ் செல்லாதாகலானும், அங்ஙனஞ் செல்ல விடாமற் றடுக்கின்ற தளையினை அறுக்க வேண்டிப் பாகவதாபிமாநங் கனத்து * அறஞ்செய்ய வேண்டுமாகலானும், அவ்வறச் செய்கைக்கு அன்னோர் உடன்படாராயினும் அவர்தம் நன்மையின் பொருட்டு அவர் பொருளை வௌவி அவ்வறச் செய்கைக்குச் செலவிடுதல் அறத்தாறே யாகலானும், மங்கை நாட்டடிகள் மேற்கொண்டது நியாயந் தவறியதாகா தென்பது.

அன்றேல், மங்கை நாட்டடிகள் செய்கையால் வயிறெரிவு பட்டோர் தம் வசைமொழிகள் அவர்க்குப் பாபம் விளைவிக்கும் நீரவாம் என்னில்: பிறர் பொருள் வௌவுதலால் உளதாய பாபம் சேரினும், அத்தொழில் தமக்கு எடுத்த எடுப்பிலாதல் பின்னிட்டாதல் ஒருவாற்றானும் ஒருவகை யின்பம் அளிக்காது, மற்று அது, வயிற்றெரிவு கொண்டார்க்கும் வயிற்றுப் பசி விண்டார்க்கும் முடிவில் ஒருங்கே பெரு நன்மை அளிக்குமாகலின், தம்மைப் பாவிகள் இனத்துட்டாமே சேர்த்துக் கொண்ட பரிசுத்த வீராகிய அடிகளை அவ்வசை மொழிகள் என் செய வல்லும்? அல்லதூஉம், இவ்விருதிறத்தார்க்கும் அடிகள் நடுநின்று தமக்கென ஒரு சுகமும் நாடாது, நல்லார் சுகத்தையே நாடுவதால் அவரை அவ்வசை மொழிகள் என் செயவல்லும்? அல்லதூஉம், † வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனாகிய கண்ணனெம்பெருமான், காவு வினையால் பாரதப்போர் நடாத்தினமை கொண்டு, அப்பகவனை பெள்ளுதலின்மையானும், அவ்விறைவன் கொண்ட கோலம் ஆராயுமிடத்து நல்லோர் தீயோர் என்னு மிரு பாலார்க்கு மொப்ப நன்மை பயக்கும் தன்மையானமையானும், அவ்விறைவனும் அவன்றன் அடியாரும், தீயோர் உலோபிகள் அறமாற்றாதார் முதலியோர் நன்மை பொருட்டே இவ்வகைத் தொழிலாற்றல் நியாயந் தவறா நெறியாற் படுவதாகலானும், இதனால் ஆவதோரிழுக்கொன்று மில்லை யென்றோர்க.

இக்கருத்துபற்றியே மங்கை வேந்தர் திருவடியார் திருக்கூட்டத்தை உபசரித்து வருநாளில், ஒரு நாள் இரவு ஏதொன்றுங் கிடைக்காமற் போக, மறுநாட் செய்யவேண்டுங் கைங்கர்யத்திற்கு ஏதுமில்லையே என்றேங்கி மயங்குவாராயினர். அந்தோ! அன்றைய இரவு அவர் பட்ட பாட்டைப் பரமனே அறிவன். 'பகவத் அபசாரம் நேரினும் பாகவதபசாரம் நேரக்கூடாதே!' என் றேங்குவர். குமுதவல்லியாரைத் தேற்றுவிடினும், கோதறு நற் பாகவதோத்தமரைத் தேற்றற் காகாதே!' என்று கூறிக்கூறி இளைப்பர். 'கூறிய சொற்றவறினும் கோரிய கைங்கர்ய ஹானி நேரக்கூடாதே!' என்று திகைத்துளம் நடுங்குவர். இப்படியாக இரவெல்லாம் நினைந்து நினைந்து, ஸ்ரீமந்நாராயணனை மனவார வாழ்த்தி, நெக்கு நெக்குருகிப் பாடிக் கசிந்து கசிந்து நெகிழ்வாராயினர். அப்போது அவர் வேறே எந்நினைவின்றி இறைவன் நினைவில் மட்டும் கருத்தூன்றிய உள்ளம் உடையோராய் இருந்தார்.

இதுதான் தக்க சமயம் என்றெண்ணிச் சர்வேச்வரன் மங்கைநாடரை ஆட்கொள விரும்பி, தமது தேவியோடு சகலாபரண பூஷிதராய் அவர் கட்புலன் கதுவும்வண்ணம் மணக் கோலத்துடன் அக்காட்டின் இடையே வந்து தோன்றினர். அத் தம்பதிகளைக் கண்ட வக்கணத்தே மங்கை மன்னனும் எல்லையில்லாத மகிழ்ச்சி கொண்டு, ஓடோடியும் வந்து, இவர்களை எதிரிட்டு மஹா வீரத்துடன், "நுங்கள் நகைகளை யெல்லாம் கழற்றி இப்பெட்டியுள் வைம்மின்; அல்லாக்கால் நும்மிருவரையுங் கோறற் றிண்ணம்," என்றச் சுறுத்தினர். மாயோனும் மனிதர்போல் பயந்து தன்றேவியார் மேல் உள்ள எல்லா அணிகலன்களையும் கழற்றிப் பெட்டியில் வைத்தனர். அம்மையாரது

* ஈண்டு, அறத்தின் பெருமையை 21-ம் திருக்குறட்குப் பரிமேலழகர் உரைத்த விசேட வுரையானுணர்க.

† தொல்காப்பியம், மரபியல், சூ. 94

186786.

திருவடிப் பெருவிரலில் அணிந்துள்ள ஓர் ஆழியையுங் கழற்ற வெண்ணி அது முடியாமற் போக, மங்கைநாடர் தம்பற்கள் கொண்டு கடித்திழுக்க வாரம்பித்தார். அப்பொழுது திருவடிப் பெருவிரல் வழியாக மங்கை மன்னர்க்கு ஞானப்பால் வாயில்விழவே, அப்பரம வடியார்க்கு ஒருவித உணர்ச்சி உண்டாய், அவ் வுணர்ச்சி அவரது நரம் பெங்கு மோட மயிர்க் கூச்செறிந்து உடம்பு முழுதும் விபர்த்தது. தமது வீரத்தால் மங்கைவேந்தர் அவ்வுணர்ச்சியை அடக்கி, அவ்வாழியைச் கழற்றிப் பெட்டியுட் போட்டுப் பின்னதனை எடுக்க வாரம்பித்தார். ஆ! அப்பெட்டி அவரால் எடுக்கப்பட முடியவில்லை. தம் முழு வலிமையும் தம் முழு வாற்றலையுங் கொண்டு முயன்று பார்த்தார்; முடியவில்லை. "இதில் ஏதோ ஒரு மந்திர விசேட முளது; இவ்வந்தணன் மந்திர முணர்ந்தவன் போலும்" என நினைந்து, "ஓ பிராம்மணா! நீ பிராம்மண னாதலின் பொறுத்தேன்; நின் மந்திரம் அனைத்தும் என் தந்திரத்தின் ஒரு முனைக்குஞ் செல்லாது; இம்மந்திரத்தை எனக்குக் கற்பித்து இப்பெட்டியை நான் எடுத்துப் போகச் செய்வையாகில், நீயும் நின் மனைவியும் பிழைத்தவர்கள் ஆவீர்கள். அல்லாக்கால், நீவிர் இருவீரும் என்றன் வாளுக்கு இரையாவீர்கள்; அறிமின்!" என்று கூறித் தம் உடைவாள் உருவி மின் திறந்தாலன்ன அவ்வாடன் பளபளப்பைக் காட்டி ஓச்சி வீசினர். அந்தணனாகிய அப்பரமனும் அதுகண்டு அஞ்சினவன் போல், "அப்பா கலியா!! அதோ தெரிகிற குளத்தில் மூழ்கிச் சந்நிதியில் எம்மிடம் வா; நினக்கு யாம் இம்மந்திரத்தை உபதேசிக்கிறோம்" என்று மொழிந்தார். அவ்வாறே அக்கலியனாகிய மங்கை நாடருஞ் செய்ய, அப்பரமனாகிய அந்தணனும், மந்திரத்திற் கெல்லாம் தலைசிறந்ததான திருவட்டாக்கரத் திருமந்திரத்தை மெல்லமெல்ல அவர் தங்காது வழியே உபதேசித்தருளினர். உபதேசஞ் செய்தது தான் தாமதம்; பாருங்கள். திடீரெனப் பல்லாயிரம் பகலவன் ஒருங்கே உதித்தாலன்ன ஒரு பெருஞ்சோதி எங்குஞ் சுடர் விட்டு விளங்கிப் பிரகாசித்தது. அச்சோதி வெள்ளத்திற் றோய்ந்த அம்மங்கை நாட்டடிகளும் ஞானவுணர்ச்சி மிக்குப் பெற்றோராய் நிமிர்ந்து பார்த்தபோது, அச்சோதிப் பிழம்பின் நடுவே ஸ்ரீமந் நாராயணன் கருடவாஹநாரூடராய், இலக்குமி சமேதராய், தனது அருட் பெருந் திருவுருவக் கோலத்தோடு சேவைசாதிக்கக் கண்டு, தம் மகம் உருகிப் போன் போடும் பேருவகையோடும் மன முழுதும் நிறைந்த பக்திப் பெருவெள்ளங் கொண்டு அவ் விறைவனையும் இறைவியையும் வழி பாடாற்றினர். இங்ஙனங் கடவுள் தம்மை மிக எளிதில் ஆட்கொண்ட அருட்பெருங் கருணையை வியந்து வியந்து ஆனந்த முற்று, அவன்றன் றிருவுருவக் கோலத்தில் ஈடுபட்டு ஆழ்ந்து பரவசம் அடைந்து, "வாடினேன்" என்ற தெய்வநன் மாலையுந் திருப்பதிகத்தை ஓதுதல் செய்தருளினர்.

இதுவன்றோ உண்மை பக்தர் நிலை; இதனான் அன்றோ, "மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்," என்றவர் தம்மைச் சிறப்பிக்கலாயிற்று. இனி யடிகள் வாள்வலியாலே திருவருட் பெற்றமை, இப்பதிகத்து ஈற்றுப் பாசுரத்திலே போந்த, "வாட் கலிகன்றி" என்ற அகச்சான்றின் ஏதுவாற் போதரூஉமென்க. ஏனைய விடங்களில் இவர் தமது மரபுக்குரிய அடையாளங்களை இங்ஙனமே குறித்துள்ளனரே எனும், இவர் இறைவன் திருவருள் பெற்ற அந்த முதற் சந்தர்ப்பத்தில் வாள்கொண்டு பயங் காட்டி மந்திர முணர்ந்தா ரென்பதை இக் குறிப்பு வலியுறுத்துகின்றமையானும், அதே காலத்தில் 'கலியன்' என்று இறைவனிட்ட பெயரையே தாமும் இவ்விடத்தில் 'கலிகன்றி' என்று குறிப்பிடுகின்றமையானும், இவரது இந்த வரலாற்றுச் செய்தியும் அச்செய்தியை உணர்த்த வந்த மேற்றனியன் பாட்டும் உண்மை யென்றே கோடற் பாற்று.

இனி மற்றைய அடியார்கள் எல்லாம் மார்ஜ்ஜால மர்க்கட ந்யாயங்களை யநுஸரித்துத் திருவருட் பெற்றோர் ஆவர். இவரோ எனின், தம்முடைய அதி தைர்ய வீர்யத்தாலே இறைவன் றிருவருளை மிக வெளிதிற் பெற்றோர் ஆகின்றார். இதனால், இவரிடம் உண்மைவீரம் அல்லது மெய்ம்மறம் குடி கொண்டிருந்தது என்று விளங்குகிறதன்றோ! இங்ஙனம் இவ்வாழ்வார் திருவருட் பெற்ற வரலாறுதான், "மங்கை மன்னன் மறம்" என்று சிறப்பாகக் கூறப்பட்டதென்க. இதற்கு அடிப்படையாக நின்றுதவி புரிந்தது இவர் மேற்கொண்ட களங்கமில்லா கைங்கர்ய பலமன்றே! இம்மறத்தால் திருமங்கை யாழ்வாருக்கு எய்தப்பெற்ற அதிதீவிர ஞானப் பேருணர்ச்சி நம்மாற் செப்புந்தரத்த தன்றென் றுணர்க.

இவ்வரலாற்றின் நிகழ்ச்சி கும்பகோணத்திற்கும் தஞ்சா வூருக்கும் நடுவண் உள்ளதொரு காட்டிலே * திருமணங் கொல்லையிலே நிகழ்ந்ததாகும். அக் காடு நாளடைவில் அழிந்து நாடாயிற்றென்க. இக்காட்டில் இருந்த இருப்பிலே் இறைவனது இன்னருள் இவருக்கு எளி

* திருமணங் கொல்லை யரசுச்சி யேறித் திசையனைத்துங்
கருமணிக் கண்கொடு காண்குறுகாற் கலிகன்றி முன்னர்த்
திருமணக் கோலத் துடன்வந் தருளுஞ் சிறப்பினவாம்,
மருமணச் சோலை யரங்க நகரப்பன் மாணடியே.

—என்று அரங்க நகரப்பன் அடிப்புகழ்ச்சி மாலை காரருங் கூறினர்.

தில் கிடைத்தமையும், அன்பு நிறைந்த இறைவன் தன் அருமை மொழியால் இவரை ஆட்கொண்டடிப்படுத்தினமையு மாகிய எளிமையும் அருமையும் தோன்றத் தம்மை யாட்கொண்ட கடவுள் திருக்குடந்தை மாலே ஆதல்வேண்டுமென அக்குடந்தை கிடந்த எம்பெருமானை, "தாவி சேரன்னந் துணையொடும் புணருஞ் சூழ்புனற் குடந்தையே தொழுதேன்." என்று இரண்டாம் பாட்டினும், "சூழ்புனற் குடந்தையே தொழுது" என்று தாம் அநுபவித்ததை உலகினரும் அநுபவிக்கச் சொல்லி யெழுந்த ஏழாம் பாட்டினும் அருளினராயிற்று.

இனி இப்பதிகத்து ஆறும் பாட்டில், "வம்புலாஞ்சோலை மாமதிட் டஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி" என்ற தென்னை யெனில்: மேற் கூறியவாறு இவ்வாழ்வார் திருவருள்பெற்றது இவ்விரு தலங்களது நடுவண் ஆயினும், திருமணங் கொல்லை யென்பது குடந்தைக்கு அண்மையிலும் தஞ்சைக்குச் சற்றுச் சேய்மையிலும் உளதாகலின், எடுத்த எடுப்பில் அண்மையி லிருப்பதாகிய திருக்குடந்தையை ஒதிப் பின்னர் சற்றுச் சேய்மைத் தாகிய தஞ்சை மாமணிக்கோயிலைமட்டும் வணங்கியவராய் மீண்டுங் குடந்தை புக்குத் தம்மை யாட்கொண்ட அவ்வெம்பெருமானைத் தாம் தொழுது அருட் பேறு பெற்ற தன்றியில், உலகினரையுந் தொழச்சொல்லி இப்பதிகத்தை முடித்துப் பின் இறைவன் உகந்தருளின நிலங்களுக் கெல்லை நிலமான இமவான் நிலத்திலே உள்ள திருப்பிரிதிக்குச் சென்றுவிட்டார். இரண்டு ஏழாஞ் செய்யுள்களின்படி, குடந்தை மாலினைத் தாம் தொழுததோடு பிறரையுந் தொழச்சொல்லி, அவற்று ணிவண் பெய்த ஆறும்பாட்டில் தஞ்சை மாமணிக் கோயிலை வணங்கியவராய்ப் பாடி யிருத்தல்கொண்டு, மங்கை நாட்டடிகளை அந்தச் சந்தர்ப்பத்தில்—அடிகள் தம்முடைய மறத்தைக் காட்டி ஞான வுணர்ச்சி பெற்ற காலத்தில்—ஆட்கொண்ட தெய்வம் குடந்தை மாலே என்றுணர்தற் பாற்று. மேலும், தொழுதல் அண்மைக்கண் நிகழ்வதாகிய நிகழ்ச்சி யெனவும், வணங்குதல் சற்றுச் சேய்மைக்கண் நிகழ்வதாகிய நிகழ்ச்சியெனவும் தருக்கமுறை கூறிற்றாகலின், ஆழ்வார் இவ் விருமொழி களைப் பெய்த நுட்பத்தையுங் கண்டு தெளிக.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

விவாஹ வயது மசோதா.

[நாச்சியார் கோவில் வித்வான் அபிநவஸரஸ்வதி குருவர்ய நடாதூர் ஸ்வாமி க்ருஷ்ணமாசாரியர்.]

(தொடர்ச்சி. 255-ம் பக்கம் பார்க்க.)

இதைவிட்டு 16-வயதுக்கு மேற்பட்ட முதமைப் பருவமுள்ள பெண்ணுக்கும் 25-வயதுள்ள ஆண் பிள்ளைக்கும் விவாஹம் செய்வதென்றால் கலிநடனம் புரிந்து ஸாம் ராஜ்யம் செய்து ஒளிரும் இக்காலத்தில் பற்பல பாபங்களுக்கு நம் உலகமே ஆளாகி, அழியாப் புகழ்பெற்ற பதிவ்ரதா சிரோமணி ஸ்த்ரீகள் வாழும் புண்ய பூமி என்று ஜயக் கொடி நாட்டப்பெற்ற இந்த நாடு தீராப் பழிபாவத்திற் காளாகி மற்றொரு பொய் மூட்டை மாயாதேவி தோன்றி நிந்திப்பதற்கும் இடம் ஏற்படும். ஸ்ரீ ஸீதை, த்ரௌபதீ, தமயந்தி, அநஸூயை, நளாயனீ முதலிய உத்தம ஸ்திரீகளின் பதிவ்ரதா தர்மத்தினாலேயே அவர்களின் ப்ரிய பர்த்தாக்கள் தீர்க்காயு ளாரோக்ய கீர்த்தியோடு ஜயசீலர்களாக விளங்கினதுடன், நம் பாரத பூமிக்கே அணிகலமாக இருந்து ப்ரஸித்தியை நிலை நிறுத்திய புண்யவதிகளான இவர்களைத் தினந்தோறும் காலையில் ஸ்மரித்தால் பண்ணிய பாபம் போம் என்று வேத புராணங்கள் கூறிக் கோஷிக்கின்றன. ஆகவே ஸ்திரீ ரத்நங்களின் இன்றியமையாத தர்மத்தினாலேயே புருஷனுடைய சிரேயஸ்ஸும், ஆயுள் விருத்தியும் ஸமஸ்த மேன்மையும் ஏற்படுகின்றன வென்பது திண்ணம். இந்த நுட்பங்களையும் வர்ணாச்ரம ஸநாதந தர்மங்களையும் கிஞ்சித்தும் கவனிக்காதவர்களும் இந்த ஸத் ஸம்ப்ரதாயங்களுக்கும் ப்ராம்ஹண ஸமுதாய தர்மங்களுக்கும் முரண்பட்டவர்களாயும் மதாசாரங்களுக்கு வேறுபட்டவர்களுமான நாஸ்திக மத ஸ்த்ரீகள் புருஷர்கள் அந்யாயமாயும் வேத சாஸ்திர விரோதமாயுமுள்ள விவாஹம் முதலியநல்ல காரியங்களைச் சட்டம் மூலமாய்க் கெடும்படி நிறைவேற்ற முன்வந்து முயற்சிப்பது தர்மமே இல்லை. இதுவரையில் எவ்வளவோ ஸ்த்ரீ ரத்நங்களும் புருஷ சிரேஷ்டர்களும் நம் இந்தியாவில் விளங்கினார்கள்; இவ்வித நிர்ப்பந்த சட்டங்களை இயற்றவும் ப்ராம்ஹணஜாதி வகுப்பு தர்மங்களைக் குறைக்கவும் முன் வந்தார்களில்லை.

வைச்யர்களும் சிறு வயதுடைய கந்நிகைகளுக்குக் கலியாணம் செய்கின்றனர். மலையாளம் நாட்டில் சில ராஜ வகுப்பினர் கந்நிகைகளுக்குச் சிறு வயதில் தாலி கட்டு என்ற அநுஷ்டானம் வைத்துக்கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் வகுப்பு ப்ரமுகர்களில் சில கனவான்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்குச் சிறு வயது கந்நிகைப் பருவத்தில் நிக்காஹ் என்னும் விவாஹ முகூர்த்தத்தை ஏராளமான வரிசை ஸ்த்ரீ தநங்கள் வீட்டுக் குரிய ஸகல பாத்ர ஸாமான்களுடன் கொடுத்து ஊர்வலம் வரும்படி செய்கின்றனராம். அயேஷா என்ற 8 வயதுள்ள கன்னிகையை நபிகள் நாயகம் விவாஹம் செய்துகொண்டிருக்கிறார். ப்ராம்ஹணரல்லாத கனவான்களும் சிறு கந்நிகைகளுக்கு விவாஹம் செய்யும் முறையைச் சில இடத்தில் கைக்கொண்டிருக்கின்றனர். பொதுவாக இதுவரையில் 8-வயது கந்நிகைகளுக்கும் யௌவந புருஷர்களுக்கும் நீடித்த காலமாகக் கலியாணம் செய்து வந்திருப்பதில் ஸ்த்ரீ புமாங்க ளனைவரும் த்ருட சரீரிகளாய்

நோயற்று தீர்க்காயுள் புத்ர புத்ரிப் பேறுகளுடன் ஸுக ஜீவிகளாய்த் தென் இந்தியாவிலும் வட இந்தியாவிலும் வஸிக்கிறார்களே யன்றி, ஒரு குறைவு மில்லை. ஆனால் ஸ்த்ரீகளுக்கு இயற்கையாய் ஏற்பட்ட தமது வீட்டு வேலைகளைக் கவனிக்காமல் அநாசாரத்தையே திருவாபரணமாக அலங்கரித்துக்கொண்டு பொழுது விடியும் போழுதே தே. காப்பியில் முழுகி ஸத் ஸம்பிரதாயங்களைக் கை நழுவவிட்ட ஓர் காரணத்தினாலேயே இளம் பர்வத்திலோ முதிர்ந்த பர்வத்திலோ கர்ப்பமானால் கண் குழிந்து இளைத்து, லேடி ஆஸ்பத்திரியை ப்ரஸவாலயமாக நாட வேண்டியவர்களாக இருக்கிறார்களே அன்றி நமது நாட்டு வழக்கப்படி பழைய அன்னம் முதலிய உணவுகளைக் காலையில் உட்கொண்டு, இயன்ற வேலைகளையும் செய்து, ஸ்நாந பானாதிகளை வைத்துக்கொண்டு ஸாதாரண வழக்க ஔஷதங்களைக் கைக்கொண்டு, பகவத் பக்தியி லாழ்ந்த மனத்தினராய்ப் பரிசுத்தமா யிருப்பார்களேயானால் எவ்வித ஆயாஸமு மில்லாமல் சிரஞ்ஜீவிகளான குழந்தைகளைப் பெற்று விளங்குவார்கள். மேற்கண்டவாறு ஸ்திரீ ரத்நங்கள் அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் பால்ய விவாஹத்தால் அசக்தியும், பிறக்கும் குழந்தைகளுக்கு நஷ்டமும் ஏற்படுகின்றன என்னும் யுக்திவாதங்கள் முயல் குதிரைக் கொம்புகள் போலாகும்.

ஸ்த்ரீக்குத் தாமதித்து விவாஹம் இயற்கையாய்ப் பெண்மையான பின் செய்தால் பலமடைவாள். பெண்களின் படிப்புக்குக் கலியாணம் தடைசெய்கிறது என்ற ஒரம்சத்தை மாத்ரம் குறிப்பிட்டு விவாஹ வயதை உயர்த்த இச்சித்தால், ஆண் பெண் என்ற வ்யவஸ்தையற்றுத் தான் தோன்றித் தனமாக வாழவே இடம்தரும்.

எந்த ஹிந்து முஸ்லிம் முதலிய வகுப்பு கனவான்களும், தம் தம் கையால் தாலி கட்டி தம் அருங்கருணைக்கும் மானத்திற்கும் பாத்திரர்களாய் வாழ்க்கைப்பட்ட தம் கணவர்களுக் கொப்பான பதிவ்ரதா சிரோமணியாம் தர்மபத்நியின் கையை அந்ய புருஷன் ஒருவன் தொட்டுப் பிடித்துப் புன்சிரிப்புடன் மயிர்க்கூச் சுண்டாகும்படிக்கு (Shake hand) கைகுலுக்கச் செய்ய ஸம்மதிக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

ஜகன் மாதாவான ஸ்ரீ ஸீதாபிராட்டியாரும் ராவணனிடம் நேரில் பேசத் துணியாமல் ஓர் துரும்பை நடுவில் போட்டுக்கொண்டு ஸ்திரீ தர்மத்தை நிலைநாட்டுபவராம் “ஆத்மானம் உபமாம்க்ருதவா” [ஏ, ராவணா! உன் பத்நியை அந்யன் ஒருவன் தீண்டினால் உன் மனது எவ்வளவு கஷ்டப்படு மென்பதை ஊகித்துக்கொள்] என்று உலக நீதியைத் தழுவி நிரூபித் திருக்கிறா ரன்றோ? அப்படிப்பட்ட உத்தம ஸ்திரீ வகுப்பைச் சேர்ந்த நம் நாட்டு ஸ்திரீ ரத்நங்கள் மேல் படிப்புகளில் பி. ஏ. பி. எல். முதலிய பட்டங்கள் பெற்று உத்தியோகங்களிலும் பல சட்ட ஸபைகளிலும் புருஷர்களைப்போலவே தாங்களும் பிரவேசித்து ஸகல ஜாதி புருஷர்களுடன் கைகுலுக்க அவர்களும் பதிலுக்குக் கைகுலுக்க இவ்வித வைபவங்களில் இஷ்டமுள்ள ஸ்திரீகளில் சிலர் வேண்டுமானால் தங்களது அபிப்பிராயத்தைப் பரிபூர்த்தி செய்து கொள்ளலாமே தவிர, அப்படிக் கில்லாமல் கொண்ட கணவனே தெய்வம் என்று எண்ணி அபாரண்யத்தால் மாத மும்மாரி பொழியத்தக்க விதமாய் அமைந்த ஆசார சீல நற்குணங்கள் பொருந்திய உத்தம ஸ்திரீகளையும் தமது வலையில் சிக்கும்படி போதிப்பது தர்மமன்று. புராதநமான சமயாசாரங்களுக்கு எதிர் நடைபாங்கால் வழக்கத்தை மாற்றி, மாதா, பிதா, குரு, தெய்

வம், என்ற பக்தியுமில்லாமல் வாழ விரும்பினால் எல்லாம் மாறுவது போல இனி புருஷகர்ப்ப வைபவமும் ஏற்பட்டுவிடலா மன்றோ? இனி ஸ்த்ரீகளே ஒருவருக்கொருவர் விவாஹத்தைச் செய்து கொள்வதும் மேலான காரியம்தான்.

“அங்கார ஸத்ருசீநாரீ க்ருதகும்ப ஸமபுமான்” [நெருப்புத் தணற்போல் ஸ்த்ரீயும் நெய்க்குடம்போல் புருஷனும் ஆகிறான்.] ஆகலின் அந்யர் கைப்பற்றிக் குலுக்கும் பெருமை எவ்வாறுரு மென்பதை ஆஸ்திகர்களான ஸ்த்ரீ புமான்களே அறிந்து கொள்வார்கள், ஹிந்துமதத்தில் படி தாண்டா பத்நி என்றும் முஸ்லீம்களின் வகுப்பில் கோஷா ஸ்திரீ என்றும் வெகுகாலமாக அநுஷ்டானத்தில் வந்திருக்கிறது. இந்த நல்ல ஸம்பிரதாயங்களை எல்லா நாட்டினரும் கொண்டாடுகிறார்கள். வருங்காலத்தை உத்தேசித்துப் பெரியோர், மரியாதைகளுக்கு உரிய ஸ்திரீகள் அந்ய புருஷருடன் பேசக்கூடாதென்றும் அவர்களுக்கு உசிதமான அளவு படிப்பு போதுமென்றும் நிர்மாணித்திருந்தனர் என்று ஏற்படுகிறது.

இது நிற்க, மகிமையான இச்சட்டத்தால் ஓர் கஷ்ட நஷ்ட ஆச்சர்யம் ஏற்படுகிறதாம். அஃதாவது

“குழலினி தியாழினி தென்ப தம்மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.”
“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்.”

[தம் புதல்வரது மழலைச் சொற்களைக் கேளாதவர் புல்லாங்குழலி னிசை இனிது வீணையி னிசை இனியது என்று சொல்வார்] எனவும்,

[தம் புத்திரனைக் கல்வி கேள்விகளிலே நிறைந்தோ னென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாயானவள் பெண்மைக் குணத்தினால் தானாக அறியமாட்டாமையால் கேட்ட தாயெனவும், சொல்லி (சான்றோனென்று அறிந்து சொல்வதற்கு உரியவர் அறிவுடையோராதலின் வருவிக்கப்பட்டது) இத்தால் தாய் மகிழ்ச்சிக்கு அளவில்லையாம்.] இவ்விரண்டு குறட்பாக்களின் பொருளுக்கிசைய மாதா பிதாக்கள் அருமைப் புதல்வர் புதல்விகளைப் பெறவேண்டி தனுஷ்கோடி ராமஸேது முதலிய புண்ணிய தீர்த்த ஸ்நானம், புத்ரகாமேஷ்டி, திலஹோமம், ஸர்ப்பசாந்தி, அரசமரம் வைத்தல், முதலிய தர்ம கார்யங்களை ஏராளமான த்ரவ்யச் செலவுகளுடன் செய்து சரீர ப்ரயாஸங்களையும் கருதாமல் குழந்தையின் முககமலத்தைக் காண்போமா என்ற பேரவாவுடன் எதிர்பார்த்த மாதா பிதாக்களுக்குக் கடவுளினருளால் கிடைத்த அருந்தவ மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டானந்தித்தும், தனது மக்களுக்குக் கல்யாணங்களைத் தகுதியான அநுரூப தாம்பத்யமாக இருக்குமாறு அமைத்தும், தாம் கண்ணாரக் கண்டு களிக்க ஆசையுடன் கூடின தாய் தகப்பன்மார்கள் தமது பெண் பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட வயதுக்குக் கீழ்பட்டுக் கல்யாணம் செய்தால் அவர்களுக்குக் கால் விலங்கு, கைவிலங்கு, மார்புவிலங்கு, மண்கூடை தலைமீது தூக்குதல் முதலிய மரியாதைகளுக் குள்ளாகும்படிக்கும் இவ்வித கொடுந் தண்டனையுடன் அபராதத் தொகை விதிக்கும்படிக்கும் முயற்சி செய்பவர்களான நம் ஹிந்து ஸ்த்ரீ புருஷர்களின் புண்ய பேற்றைப் புகழக் கூடியதா யிருக்கிறது.

இத்தால் ஓர் விசேஷார்த்தம் மேற்படுகிறது. அதாவது, நல்ல மணமகனைத் தேடி அலைந்த கால்களுக்கு மரியாதையும், ஜலத்தைத் தாரையாக வார்த்துக் கன்னிகாதானம் செய்த கைகளுக்கு வீரசங்கிலி மரியாதையும், அருங் குழந்தைகளை மார்மீதும் தோள்மீதும் வைத்து மார்போடு தழுவி ஆகர்ஷித்த இடத்திற்கு மரியாதையும், கல்யாண ஸாமான்களைத் தலைமீது தூக்கினதற்குக் கிரீடம்போன்ற மரியாதையும், மாப்பிள்ளைகளுக்கு ஸநாதந ஸம்பிரதாயப்படி வீடு நிலங்களை விற்றும் அடகு வைத்தும், கிடைத்த பொருளைக் கொண்டு வரதக்ஷிணை, வெள்ளிப் பாத்ரம், தங்கப்பாத்ரம் முதலிய மரியாதை வரிசைகள் செய்ததற்கு அபராத த்ரவ்ய மரியாதையும் இதுவோ பிரதி பலன் என்னலாம்.

ஸ்ரீ க்ருஷ்ணாவதார ஸமயத்தில் அதற்குமுன் அவரது மாதா பிதாக்களான தேவகீ வஸுதேவர் இவர்களுக்கு அக்காலத்தில் உதித்தவர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்த மேற்கண்ட கொடுந்தண்டனை பகவத் க்ருபா கடாக்ஷம் உண்டானதும் மாறவில்லையா?

"புத்" என்கிற கொடிய நரகத்தினின்றும் ரக்ஷிப்பவன் புத்ரன். அப்படியிருக்க, பூஜ்யர்களான மாதா பிதாக்களை நரகவாதனைகளுக்காளாக்க அருமையான புத்ரர் புத்ரிகளுக்கு மனம் வருமா? அவர்களுக்கு வாழையடி வாழைபோல் புத்திர புத்ரிப் பேறு ஏற்படுமன்றோ? ஆகவே நமதிந்திய மாதாவின் தவத்தாலீன்றெடுத்த புருஷ ஸிம்ஹங்களும், வீரஸ்த்ரீ மணிகளும், மேலே குறிப்பிட்ட நமது வேதசாஸ்த்ர ஸநாதந தர்மங்கள் வழிகாட்டுகிறபடி வெகு நாளாக இயற்கையாய் ஏற்பட்ட ஆசாரங்களை நழுவவிடாமல் பாதுகாத்துக்கொள்ள முக்கியமாய்க் கடமைப்பட்டிருக்கின்றனர். பலவித பாபங்களும் நிறைந்துள்ள ருதுமதி விவாஹம் விவாஹ வயது சட்ட மசோதா இவ்வித தீங்கிழைக்கும் சட்டங்களைச் செய்ய வற்புறுத்தாமலிருப்பார்களேயானால் "ஆர்யாவர்த்த: புண்ய பூமி" என்று கொண்டாடி புகழ்மொழி கூறத்தக்க இந்தியா மாதரசி ஸத்புத்ர புத்ரிகளைப் பெற்றெடுத்த பெருமையையடைந்தவளாய்த் தனது அரும்புதல்வர் புதல்விகளுக்கு மங்களகர ஸ்வராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்துவைத்து குளிரக்கடாக்ஷிப்பள். காருண்யாம்ருதக் கடலில் அவதரித்து உத்தம குணங்களையே திருவாபரணங்களாக அலங்கரித்துக்கொண்டு மஹா வைபவத்துடன் செங்கோல் செலுத்திய ஸ்ரீ மஹாராணியாரவர்கள் முதலிய ராஜ்ய பாரத்தை வஹித்த புண்யாத்மாக்களான அரசி அரசர்களும், ஹிந்து மஹாதர்மங்கள் குலையாமற் குறைவின்றி மேன்மேல் அபிவிருத்தி பெற்று விளங்கிவருவதில் அன்புடையவர்களாய் மதவிஷயங்களில் பிரவேசிப்பதில்லை என்று வாக்களித்த வண்ணம், ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ ஸ்மார்த்த ஸ்ரீமத்வாதி த்ரிமத மடாதிபதிகள் ஸ்ரீ ஆசார்ய பீட ஸிம்ஹாஸநாதிபதிகள் ஸமஸ்தமான இவ்விந்தியா தேசத்திலுள்ள ஆஸ்திக பிராஹ்மணர்கள் இவ்வகுப்பு ஸ்திரீகள் வைசியர்கள் முதலிய சில வகுப்பு உத்தம கனவான்கள் அந்தந்த வகுப்பு ஸ்த்ரீகள் முதலிய மஹாஜனங்களின் கோரிக்கைப்படி ராஜ்ய நிர்வாஹத்திற்கு அஸ்திவாரமான ஹிந்து ஸநாதந தர்மத்தைக் கைகொடுத்துதவி ஸம்ரக்ஷிப்பார்களென்றும், ஆஸ்திக மஹா ப்ராஹ்மணாதி ஸ்திரீ புருஷர்களுக்குக் கவலையை உண்டுபண்ணுகிற [ருதுமதி] ப்ரௌடா விவாஹம், விவாஹ வயது சட்ட மசோதா இவைகளைச் சட்டமாக்காமல் "பூர்வைராசரிதம் குர்யாத்" என்ற மஹா சாஸ்த்ரப்படி பழைய உத்தம ஆசாரத்தை அநுஸரித்து வரும்படிக்கு உதார தர்மராஜ்ய பரிபாலநம் செய்துவருகிறார்களென்றும் ஒரு நிச்சய மணியை மஹாஜனங்கள் ஒவ்வொருவரும் தனது ஹ்ருதயப் பெட்டியில் வைத்துக்கொண்டு ஜய சீலர்களாய் மங்களத்தை விரும்பி விளங்குகிறார்கள்.

(சுதேசமித்ரன் பத்ரிகை)

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே ருக்ஷீந்த்ர ஸிம்ஹாஸநாய ப்ரஹ்மணே நம: ॥

யோऽநேக: ப்ரவிஶ்ய ஸர்வாந் அஶேஷாந் ப்ரஸாத்ய ஸ்தாம்

ஸஞ்ஜீவயத்யவிரதஸ்ருதிய: ஸ்வயாந்நா ।

ஸ்நத்யாம்ஸ்த்து ஹஸ்தே அரணாஶ்ரவணாஸ்வமாதீநு

ப்ராணாஸரோ ஹமவதே வாராஷாய தஸ்மை ॥

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை.

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஆசார்ய ப்ரயுக்தமாகவும் ஸம்ப்ரதாய ப்ரயுக்தமாகவும் பேதங்கள் ஏற்பட்டு, அவை காரணமாகப் பரஸ்பரம் ஸ்பர்த்தையும் கலஹமும் ஸம்பவிக்கின்றமை பற்றிச் சோகித்து, ஸ்ரீ. உ.ப. காரப்பங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமி சென்ற ஸஞ்சிகையில் ஒரு பத்ரிகையை அநுக்ரஹித்திருந்தார். அதைப் பார்த்த, நாகப்பட்டணம் ஸ்ரீ. உ.ப. கே. பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்னும் நமது ஸுஹ்ருத்துக்களுள் ஒருவர், அது விஷயமாகத் தம்முடைய அபிப்ராயத்தை வெளியிட்டும், இக்காலத்திய வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களையும் அவர்களுடைய ஆசாரங்களையும் நிந்தித்தும் நமக்கு ஒரு ஸ்ரீ முகத்தை நியமித்திருக்கிறார். அந்த ஸ்ரீ முகம் பாஷாந்தரத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியால், அதை அவர் எழுதியிருக்கிறபடி நமது தீபிகையில் ப்ரகாசிப்பிக்க நாம் அசக்தராக இருக்கிறோம். ஆனால், அதில் அவரால் வெளியிடப்பட்டுள்ள அபிப்ராயங்கள் அநுபபந்நங்களாக இருக்கிறபடியால், அவைகளை மாத்ரம் இவ்விடத்தில் ஸங்க்ரஹித்து அவைகளுக்கு யதோசிதம் ஸமாதாநத்தைச் சொல்ல ப்ரவ்ருத்திக்கிறோம்.

நமது பாஞ்சராத்ர ஆகமங்கள் வேத விருத்தங்களென்றும், ஸ்ரீ ராமாநுஜாசார்யர் அவைகளுக்கு ப்ராதாந்யம் கொடுத்த பிறகே ப்ராஹ்மணர்களுக்குள் ஒற்றுமைக் குறைவும் கலஹமும் ஏற்பட்டனவென்றும், அந்த ஆகமம் காரணமாக நமக்குள் அநுஷ்டாநத்திற்கு வந்திருக்கும் ஆசாரங்களெல்லாவற்றையும் நாம் பரித்யஜிக்காத வரையில் நமக்கு ஐகமத்ய ரூபமான ச்ரேயஸ் ஸம்பவிக்க மாட்டாதென்றும் ஸ்ரீ. ஐயங்கார் எழுதுகிறார். நமது ஆகமங்கள் வேதத்திற்கு விருத்தங்களென்று சொல்வது வஸ்து ஸ்திதிக்கு விருத்தம். எந்த அம்சங்களில் அவை வேத விருத்தங்களென்று ஸாமாந்ய ஜனங்களால்

சங்கிக்கக்கூடுமோ, அந்த அம்சங்க ளெல்லாவற்றையும் ஸ்ரீ யாமுனாசார்யர் முதலான பூர்வாசார்யர்கள் விஸ்தரமாக விசாரித்து, வேத விரோத மென்பதே அவைகளில் இல்லையென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த நிர்ணயம் நமக்குப் போதுமான ப்ரமாணம். ஸ்ரீ ஐயங்கார் சொல்லுகிறபடி கேவலம் பக்தியின் ஆதிக்யத்தால் ஜந்மஸித்தமான வர்ண பேதம் போய்விடுகின்ற தென்றுவது, அம்மாதிரியான கேவல பக்தி இதர வர்ணத்தார்களுக்கும் ப்ராஹ்மண தர்மாநுஷ்டாநத்திற்கு அபேக்ஷிதமான யோக்யதையைக் கொடுக்கின்ற தென்றுவது, ப்ரபத்தி வித்யையைக் கைப்பற்றினவர்களுக்குப் பகவாந் ஸ்வச்சந்த வ்ருத்தியைக் கொடுத்து அவர்கள் செய்யும் பாபங்களை ஆமோதிக்கிறு னென்றுவது பாஞ்சராத்ரம் சொல்லவில்லை. பாஞ்சராத்ரத்தை அநுஸரிக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்க ளெல்லாரும் வேதங்களிற் சொல்லப்பட்டுள்ள விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டவர்களே. ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளுக்கு நாம் ப்ராதாந்யம் கொடுக்கிறோம் என்பது உண்மையே. ஆனால் அது வேத விரோதமாகுமோ?

பாஞ்சராத்ரத்திற்கு முதலில் ப்ராதாந்யம் கொடுத்தவர் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் அன்று; வ்யாஸ மஹர்ஷி. அவர் தமது மஹா பாரதத்தில பாஞ்சராத்ரத்தைப் பற்றி மிகப் புகழ்ந்து பேசி யிருக்கிறார்; ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் அதை ஸ்தாபித்திருக்கிறார். ஆகையால், பாஞ்சராத்ரம் கலஹ ஜநகமாக இருக்கும் பக்ஷத்தில் வ்யாஸ மஹர்ஷியின் காலத்திலேயே ப்ராஹ்மணர்களுக்குள் ஒற்றுமைக் குறைவும் கலஹமும் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒன்றும் ஏற்படவில்லை யாதலால், இப்பொழுது தென்படும் ஒற்றுமைக் குறைவு பாஞ்சராத்ராநுஷ்டாநங்களால் ஏற்பட்டன வென்று சொல்வது நிலைபெறமாட்டாது.

ஒற்றுமையை உத்தேசித்து நாம் நமக்குப் பரம்பரையாகக் கிடைத்திருக்கும் அநுஷ்டாநங்களைப் பரித்யஜிக்கவேண்டு மென்று சொல்வதும் யுக்தியுக்தமன்று. ஒற்றுமைக் குறைவுக்குக் காரணம் காம க்ரோதாதிகளுக்கு நாம் பரவசமா யிருப்பதே தவிர அநுஷ்டாந பேதமன்று. அநுஷ்டாந பேதமே இல்லாமல் இருக்கு மிடங்களில் ஒற்றுமைக் குறைவு ஓங்கி வளர்வதும், அநுஷ்டாந பேதம் இருக்கையிலும் ஸத்துக்களுக்குள் பரஸ்பரம் ஸௌஹார்த்தம் இருப்பதும் ப்ரத்யக்ஷ ஸித்தம். தவிரவும், ப்ராஹ்மணர்களுக்குள் ஒற்றுமையை ஸ்தாபிப்பதற்காக ஸ்ரீ வைஷ்ணவர்களும் சைவர்களும் தம் தமக்குப் பரம்பரா ப்ராப்தங்களான ஆசாரங்களைப் பரித்யஜிக்க வேண்டுமானால், ப்ராஹ்மண அப்ராஹ்மணர்களுக்குள் ஒற்றுமையை ஸ்தாபிக்கும் பொருட்டு நாம் ப்ராஹ்மண தர்மத்தையும் கைவிடும்படி ப்ரஸங்கிக்கும். இவ்விதம் ப்ரஸங்கித்தால் இதற்கு முடிவு இவ்விடத்தில்தான் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஸகல ப்ரஜைகளும் பரஸ்பரம் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரவேண்டு மென்பதன்றோ ஸாத்விகர்களுடைய ப்ரார்த்தநை? அதைத் தலைக்கட்டும் பொருட்டு ஸகல தர்ம பரித்யாகத்தைப் போதிப்பது உசிதமாகுமோ? இந்த அம்சங்களை நமது ஸுஹ்ருத் ஸ்ரீ. கே. பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் சற்று ஊன்றிப் பராமர்சிக்க வேண்டுமென்று நாம் அவரை ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

[illegible]

[illegible] .... [illegible] — தவிரவும், ப்ரத்யக்ஷமாக நம்மால் பார்க்கப்படும் ப்ரபஞ்சமானது பொய்யென்று சொல்வதற்கு ப்ரமாணம் என்ன? 'ப்ரத்யக்ஷம் என்பது தோஷத்தால் ஏற்படுகின்றது. அதற்கு வேறுவிதமாக ஸித்தி சொல்லக் கூடு மாகையால் எவ்வித தோஷ ஸம்பந்தமில்லாததும் வேறுவிதமாக ஸாதிக்கக் கூடாததுமான சாஸ்த்ரமானது அந்த ப்ரத்யக்ஷத்தைப் பாதிக்கும்' என்னில், 'அந்தத் தோஷமாவது என்ன? எந்தத் தோஷத்தால் ஆக்ரமிக்கப்பட்டதாய் இந்த ப்ரத்யக்ஷம் இப்படி கணக்கற்ற பேதங்களைக் காட்டுகின்றது? என்பதற்கு ஸமாதாநம் சொல்லவேண்டும். 'அநாதிகாலமாக நமக்குக் கிடைத்திருக்கும் பேத வாஸனையே தோஷம்; அந்தத் தோஷத்தாலேயே ப்ரத்யக்ஷம் இம்மாதிரி தென்படுகின்றது' என்று சொல்லும் பக்ஷத்தில் அந்த

[illegible] —

இவ்விடத்தில் '[illegible]' என்பதற்குப் 'பிந்தி வரும்' என்பது பொருள் அன்று; 'பிந்தித் தோன்றும்' என்பதே அதன் கருத்து. ஒரு வஸ்துவை 'இது இன்னது' என்று முன்னதாகத் தெரிந்துகொண்டால்தான் 'அது இல்லை' என்று பின்னதாகச் சொல்லக் கூடும். ஆகையால், வஸ்து ஜ்ஞாநம் முந்தியது; 'அது இல்லை' என்னும் ஜ்ஞாநம் பிந்தியது. இதை 'அபாவ ஜ்ஞாநத்தைக் குறித்து ப்ரதியோகி ஜ்ஞாநம் காரணம்' என்று பெரியோர்கள் வ்யவஹரிப்பார்கள். இதனால், இல்லையென்று சொல்லும் நிஷேத வாக்யமே ப்ரபலம் என்று சொன்னதாயிற்று. இந்த ந்யாய ப்ரகாரம் 'ஒன்றும் இல்லை' என்னும் ஸர்வ சூந்ய வாதம் எல்லாவற்றையும் காட்டிலும் பிந்தியது ('[illegible]) அதாவது ப்ரபலம் என்று சொல்லப்படுகின்றது. இப்படி எல்லாவற்றையும் காட்டிலும் பிந்தியதாயும் ப்ரபலமாயுமுள்ள ஸர்வ சூந்ய வாதத்திற்கு, அதைக் காட்டிலும் பிந்தியதாகவும் ப்ரபலமாகவும் வேறொன்று மில்லையாதலால், அதற்கு மற்றை ஒன்றாலும் பாதம் ஸம்பவிக்கமாட்டாதன்றோ? ஆகவே '[illegible]' என்பதற்கு இதுதான் அர்த்தம். இந்த அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர், '[illegible]' என்று ஆரம்பண அதிகரணத்தில் அநுக்ரஹித்திருக்கிறார்.

[illegible] — 'அத்வைதிகள், ப்ரத்யக்ஷத்தைத் துர்பலமாகவும் சாஸ்த்ரத்தைப் பலீயஸ்ஸாகவும் சொல்லுகிறார்களே; அது ஏன்?' என்பதை விசாரித்து, 'அப்படி அவைகளுக்குத் தௌர்பல்ய ப்ராபல்யங்கள் இல்லை' என்பதை நிரூபிக்கிறார்.

[illegible]

தோஷம் சாஸ்த்ரத்துக்கும் உண்டன்றோ? இப்படி ப்ரத்யக்ஷம் சாஸ்த்ரம் இரண்டும் ஒரே தோஷத்தால் கல்பிதங்களாக இருக்கிறபடியால், ஒன்றைப் பாதிக்கப்படத் தகுந்ததென்றும் (துர்பலமென்றும்), மற்றொன்றைப் பாதிக்கத் தகுந்ததென்றும் (ப்ரபலமென்றும்) எப்படி நாம் சொல்லக்கூடும்? தவிரவும், ப்ரத்யக்ஷத்திற்கு விஷயம் வேறு, சாஸ்த்ரத்துக்கு விஷயம் வேறு. ப்ரத்யக்ஷமானது, ஆகாசம் வாயு முதலிய ஐந்துவித பூதங்களையும், அந்தப் பூதங்களுடைய சேர்க்கையால் உண்டானதாயும் சப்தம் ஸ்பர்சம் முதலிய குணங்களுடன் கூடியதாயுமிருக்கும் மநுஷ்யத்தன்மை முதலிய அமைப்புகளுடன் காணப்படும் பதார்த்தங்களையுமே க்ரஹிக்கின்றது; சாஸ்த்ரமோவென்றால், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களுக்கு எட்டாததாயும் ஸர்வாந்தராத்மத்வம் ஸத்யத்வம் முதலிய கணக்கற்ற விசேஷணங்களை யுடையதாயுமிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும், அந்த ப்ரஹ்மத்தை உபாஸிப்பது முதலான ஆராதிக்கும் ப்ரகாரங்களையும், அந்த ப்ரஹ்மத்தின் அநுக்ரஹத்தால் அடையக்கூடிய ப்ரஹ்ம ப்ராப்தி முதலான பல விசேஷங்களையும், அந்த ப்ரஹ்மத்தின் ஆஜ்ஞையை அதிலங்கநம் செய்வதால் ஸம்பவிக்கும் கெடுதல்களையும் பற்றியே பேசுகின்றது. ஆகையால் சாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம் என்பதே ஸம்பவிக்கமாட்டாது. தவிரவும், சாஸ்த்ரத்திற்கு ப்ராபல்யம் சொல்லும் நீ, 'ப்ரத்யக்ஷம் பரமார்த்தம்' என்று அவசியம் ஒத்துக் கொள்ளவேண்டும். சாஸ்த்ரமானது ப்ரத்யக்ஷத்தையே ஆதாரமாக உடைத்தா யிருக்கின்றதன்றோ? ஆரம்பம்

ஜ்ஞாநாஸமவாயாதி—இவ்விதம் ப்ரத்யக்ஷ சாஸ்த்ரங்களுக்குப் பரஸ்பரம் பாத்ய பாதக பாவமில்லை என்பதை நிரூபித்துவிட்டு, அவை யிரண்டுக்கும் விஷயங்கள் வெவ்வேறானதால் அவைகளுக்குப் பரஸ்பரம் விரோதமே இல்லை என்று சொல்லுகிறார். விரோதம் இருந்தாலன்றோ அவைகளுக்குப் பரஸ்பரம் பாத்ய பாதக பாவம் ஸித்திக்கும் என்பது குறிப்பு.

[illegible]

[illegible]

முடிவு ஒன்று மில்லாமல் அவிச்சிந்நமான பாட ஸம்ப்ரதாயம் முதலிய அநேக குணங்கள் சாஸ்த்ரத்திற்கு உண்டென்று நீங்களே ஒத்துக் கொள்ளவில்லையா? குத்ருஷ்டிகள் சொல்லும் வேறு யுக்திகளும் இம்மாதிரி தோஷ துஷ்டங்களே. அநேக வாக்ய பரம்பரைகளை அடக்கியுள்ள அநேக சாகைகளை யுடைத்தாயிருக்கும் கணக்கற்ற ச்ருதிகளாகிற ப்ரபலமான பெருங் காற்றின் முன் இம்மாதிரியான குதர்க்க ஜாலங்களெல்லாம் இலவம் பஞ்சாகப் பறக்கின்றன வென்று நாம் இவ்வளவில் விரதராகிறோம்.

—:O:—

த்விதீயே........வஸிஷஸஞ்ஜீ—இரண்டாவது மதத்திலும், உபாதிப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஒரு வஸ்து ஒத்துக்கொள்ளப்படவில்லை யாதலால், உபாதியின் ஸம்ஸர்க்கம் ப்ரஹ்மத்திற்கு ஏற்படுகிறதென்று சொல்ல வேண்டும்; அப்பொ

த்விதீயே பக்ஷே — இரண்டாவதாகிற பாஸ்கர மதத்தில். "ஸாம் ... " இத்யாதியான ச்லோகத்தில், முதலில் அத்வைதிகளின் மதத்தையும், பிறகு பாஸ்கர மதத்தையும் பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறபடியால், இது வரையில் அத்வைத மதத்தைக் கண்டித்துவிட்டு, இப்பொழுது பாஸ்கர மதத்தை இரண்டாவது பக்ஷமென்று வ்யவஹரித்து அதைக் கண்டிக்க உபக்ரமிக்கிறார்.

உபாதி ப்ரஹ்ம—உபாதியுடன் ஸம்பந்தம் பெற்றிருக்கும் ப்ரஹ்மம். ப்ரஹ்மமே, தேஹம் முதலிய உபாதிகளுடன் ஸம்பந்தம் பெற்று ஜீவன் முதலிய ரூபத்தை அடைகின்றது என்பது பாஸ்கர மதஸ்தர்களுடைய கொள்கை. அத்வைதிகள் மதத்திற்போல் 'பொய்' என்னும் கொள்கையால் ஏற்படும் அநுபபத்திகள் பாஸ்கர மதத்தில் ஏற்படாவிடினும், 'ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸ்வரூபம் ஒன்றே' என்று சொல்வதால் ஏற்படும் தோஷங்கள் இருக்கின்றன என்று நிரூபிக்கின்றார்.

ப்ரஹ்மணோऽபி ஸ்யு: । ததப்ராப்தவாதஸ்து — யதா வடாகாசாதே: பரிச்சின்னதயா

முதலிய உபாதிஸம்பந்தங்களான ஸகல தோஷங்களும் ப்ரஹ்மத்திற்கும் ஏற்படும். அப்படி ஏற்பட்டால், 'ப்ரஹ்மம் எவ்வித தோஷமுமற்றது; அது அபஹத பாப்ம' என்று சொல்லும் ச்ருதிகளெல்லாம் பாதிதங்களாகிவிடும். 'அப்படி பாத ப்ரஸங்கம் வரமாட்டாது. எப்படியானால் கடத்தில் இருக்கும் ஆகாசம் முதலியவைகள், ஆகாரத்தில் அள

ஔபாதிகா: ஸர்வே தோஷா: —உபாதியால் ஏற்படும் தோஷங்களெல்லாம்.

யதா வடாகாசாதே: —பாஸ்கர மதஸ்தர்கள், ஆகாசமாகிற த்ருஷ்டாந்தத்தை அவலம்பித்துத் தமது கொள்கையைப் பின்வருமாறு நிரூபிக்கிறார்கள். ஆகாசம் என்னும் பதார்த்தம் ஒன்றே; அது ஸர்வ வ்யாபி. அப்படி இருக்கையிலும், அது, ஒரு குடம் முதலியவைகள் இருக்குமிடங்களில் அந்தக் குடம் முதலியவைகளின் அளவுடனும் ஆகாரத்துடனும் கூடினதாகவே தென்படுகின்றது; ஒன்றைக் குடத்தின் ஆகாசமென்றும், மற்றொன்றைக் கலசத்தின் ஆகாசமென்றும், இம்மாதிரி பரஸ்பர பின்னங்களாகவும் மஹாகாசத்தினின்று வேறுபட்டவைகளாகவுமே நாம் அவைகளை வ்யவஹரிக்கின்றோம். இவைகளில் நாம் பார்க்கும் ஆகாரச் சிறுமை பெருமை முதலிய குணதோஷங்கள் மஹாகாசத்தில் எவ்வித ஸம்பந்தப் படாதவைகளாகவே இருக்கின்றன. இந்த மஹாகாசம் போலவே ப்ரஹ்மமும். எப்படியானால் இந்த ஆகாசம், குடத்தின் ஸம்பந்தத்தைப் பெறுமிடத்தில் குடத்தின் ஆகாசமாகவும் கலசத்தின் ஸம்பந்தத்தைப் பெறுமிடத்தில் கலசத்தின் ஆகாசமாகவும் மாறுகையிலும் அந்தக் குட கலசங்களுடைய குண தோஷங்களால் ஸம்பந்தப்படாமல் இருக்கின்றதோ, அம்மாதிரியே ப்ரஹ்மமும், தேஹம் முதலிய உபாதிகளின் ஸம்பந்தத்தைப் பெறும்பொழுது ஜீவன்களாக மாறின போதிலும் அந்த ஜீவன்களுடைய குண தோஷங்களால் ஸம்பந்தப்படாமலே நிற்கின்றது. இதுதான் அவர்கள் சொல்லும் த்ருஷ்டாந்தம். இந்த த்ருஷ்டாந்தத்தில் அவர்களாற் சொல்லப்படும் விஷயமே இல்லை என்பது இதற்குச் சொல்லப்படும் ஸமாதானம். ஆகாசம் என்னும் வஸ்து அவயவங்களுடன் கூடியதாகவும் பாகம் பாகமாகப் பிரிக்கக் கூடியதாகவும் இருக்கும் பக்ஷத்தில், பாஸ்கரர் சொல்வதுபோல் குடத்துடன் ஸம்பந்தம் பெற்றிருக்கும் பாகம் குடத்தின் குணதோஷங்களால் துஷ்டங்களாகின்றது என்றும், மஹாகாசம் அப்படி துஷ்டமாகாமலே இருக்கின்றது என்றும் ஒரு வ்யவஸ்தை சொல்லக்கூடும். அப்படி பாகம் பாகமாக ஆகாசம் பிரிக்கக்கூடாததாதலால், எவ்விடத்திலாவது தோஷ ஸ்பர்சம் ஏற்பட்டபோதிலும் அந்தத் தோஷம் எவ்வித வ்யவஸ்தை

மஹாகாசாதெர்குணதோஷம் வாரஸ்பரஸ்ய ஸம்பந்தே, தத்ஸ்தா: குணா வா தோஷா வா க்ருதவஸ்தினோ மஹாகாசேந ஸம்பத்யந்தே, ததைவோபாதிக்ருதபேதவ்யவஸ்திதஜீவகதா தோஷா: க்ருதவஹிதே பரே ப்ரஹ்மணி ந ஸம்பத்யந்தே' இதி சேந்நைதது பபத்யதே । நிரவயவஸ்யாகாசஸ்யாநவச்சேத்யஸ்ய வடாதிபிச்சேதாஸம்பவாத்தேநைவாகாசேந வடாதய: ஸம்யுக்தா இதி ப்ரஹ்மணோऽப்யச்சேத்யத்வாத் ப்ரஹ்மைவோபாதி

வுக் குட்பட்டவைகளாக இருந்துகொண்டு, மஹாகாசத்தைக் காட்டிலும் விலக்ஷணங்களாகவும் பரஸ்பரம் வேறுபட்டவைகளாகவும் காணப்படுகின்றனவோ, அவைகளில் தென்படும் குணங்களாவது தோஷங்களாவது எவ்வித அளவுக்கும் உட்படாமல் இருக்கும் மஹாகாசத்தில் ஸம்பந்திக்கவுமில்லையோ, அம்மாதிரியே உபாதியால் ஏற்படும் பரஸ்பர பேதமடியாக வரும் குணதோஷ வ்யவஸ்தையுடன் கூடிக்கொண்டிருக்கும் ஜீவன்களுடைய தோஷங்கள் பரப்ரஹ்மத்தினிடத்தில் ஸம்பந்திக்கமாட்டா' என்னில், இது உபபந்நமாக மாட்டாது. ஆகாசமானது அவயவமற்றது. ஆகையால் சேதிக்கத்தகாதது; குடம் முதலியவைகள் அதைச் சேதிக்கமாட்டாவாதலால், அவைகள் அந்த ஆகாசத்துடன் ஸம்பந்தப்பட்டே இருக்கின்றன. அதுபோல, ப்ரஹ்மமும் சேதிக்கத் தகாததாதலால், உபாதிகள் ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தப்பட்டே இருக்கின்றனவென்று

யுமின்றிக்கே ஆகாசம் முழுவதிலும் பரவுகின்றது என்றே சொல்ல வேண்டுமன்றோ? ஆகையால், மஹாகாசம் ஒருபொழுதும் தோஷ துஷ்டமாகிறதில்லை என்று சொல்வது உபபந்ந மாகமாட்டாது. அந்த மாதிரியே உபாதிப்ரஹ்மத்திற்குத் தோஷ ஸ்பர்சம் ஏற்படுகையில் உபாதி ஸம்பந்தம் பெறாத பரப்ரஹ்மமும் தோஷ துஷ்டமாகின்றது என்றே சொல்லவேண்டும்.

உபாதிக்ருத பேதவ்யவஸ்திதஜீவகதா தோஷா: —உபாதி ஸம்பந்தத்தால் ஏற்படுமேது ஜீவன்களுள் தென்படும் பரஸ்பர பேதம். அந்தப் பேதத்தால் ஜீவன்களுக்குக் குண தோஷங்கள் வ்யவஸ்திதங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட ஜீவன்களிடத்தில் இருக்கும் தோஷங்கள் என்பது இந்தப் பதத்தின் அர்த்தம்.

அநுபஹிதே பரே ப்ரஹ்மணி —உபாதி ஸம்பந்தம் பெறாத பர ப்ரஹ்மத்தினிடத்தில்.

ஸம்யுக்தம் ஸ்யாத் । 'கடஸம்யுக்தாகாஶப்ரதேஶோ'ந்யோ'ஸம்யுக்தாகாஶ ப்ரதேஶாத் ப்ருதகேவ' இதி சேத், ஆகாஶஸ்யைகஸ்யைவ ப்ரதேஶ

சொல்லவேண்டும். 'குடத்திலுள்ள ஆகாச ப்ரதேசம் மற்றை ஆகாச ப்ரதேசங்களைக் காட்டிலும் வேறுபட்டதே' என்னில், அதிலும் எவ்வித நியமமும் இல்லை. ஆகாசம் என்பது ஒரே வஸ்து; அதற்கு ப்ரதேச பேதத்தால் குடம் முதலியவைகளுடன் சேர்க்கை நேர்கின்றது. ஆகையால், ஒரு குடம், ஒரு இடம் விட்டு மற்றோரிடத்திற்கு போகுகையில் அந்த ப்ரதேசத்திற்கு எவ்வித வ்யவஸ்தையும் இல்லை. அம்மாதிரியே ப்ரஹ்மத்தின் விஷயத்திலும் ப்ரதேச பேதத்திற்கு அவ்யவஸ்தை ஸம்பவிக்கிறபடியால் ப்ரஹ்மத்திற்கு உபாதியின் ஸம்ஸர்க்கம் நிச்சயம் ப்ரஸங்கிக்கும். தவிரவும், உபாதி ஓரிடம்விட்டு மற்றோரிடம் போகையில், உபாதி

கடஸம்யுக்தாகாஶப்ரதேஶ:—மறுபடியும் பாஸ்கர மதஸ்தர்கள், வேறொரு ஹேதுவை அவலம்பித்துக் குண தோஷங்களுடைய வ்யவஸ்தையைச் சொல்லுகிறார்கள். குடத்துடன் சேர்ந்திருக்கும் ஆகாச ப்ரதேசம் ஒன்று, அதனுடன் சேராமலிருக்கும் ப்ரதேசம் மற்றொன்று; இப்படி ப்ரதேசம் வேறுபடுகிறபடியால், ஒரு ப்ரதேசத்தில் ஒரு குடத்தின் ஸம்பந்தத்தால் ஏற்படும் தோஷம் அந்த ப்ரதேசத்திலேயே வ்யவஸ்திதமாக நிற்கவேண்டுமே தவிர வேறு ப்ரதேசங்களுக்கும் அவ்யவஸ்திதமாக அது போகமாட்டாது. இதுதான் அவர்கள் சொல்லும் வ்யவஸ்தை. இந்த வ்யவஸ்தையும் நிலைபெற மாட்டாது. ஏனென்றால், உபாதிகள் ஒரே ப்ரதேசத்தில் நிலையாக நிற்கவில்லையன்றோ? குடம் என்பது ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்திற்குச் சலிக்கிறதில்லை என்று ஒரு நியமம் இருக்கும் பக்ஷத்தில், அவர்கள் சொல்லும் வ்யவஸ்தை ஸம்பவிக்கக்கூடும். அப்படி நியமம் இல்லை. ஒரு ப்ரதேசத்திலிருந்து வேறொரு ப்ரதேசத்திற்கு ஒரு குடம் கொண்டுபோகப்படும் பொழுது, அந்தக் குடத்துடன் ஸம்பந்தப்பட்ட ப்ரதேசமும் மாறுகின்றது; அந்தக் காரணத்தாலேயே குடத்தின் ஸம்பந்தத்தால் ஏற்படும் தோஷம் ஒரு வ்யவஸ்தை இல்லாமல் ஆகாசம் முழுவதற்குமே ஏற்படுகின்றதென்று சொல்லவேண்டும். தவிரவும், ஆகாசம் என்பது ஒரே வஸ்து; அநேக வ்யக்திகள் அடங்கியுள்ளது மன்று. ஆகையால், 'இதற்கு மாத்ரம் தோஷஸ்பர்சம் உண்டு, மற்றொன்றுக்கு இல்லை' என்று சொல்வதும் ஸாத்யமில்லை.

ஹேதௌ கடாதிஸம்யோகாத்ருஷ்டாந்த கச்சதி தஸ்ய ச ப்ரதேஶஸ்தா நியம இதி, தத்வத் ப்ரஹ்மணோ'பி ப்ரதேஶபேதாநியமேந உபாதிஸம்ஸர்கே, உபாதௌ கச்சதி ஸம்யுக்தவியுக்த ப்ரஹ்மப்ரதேஶபேதாத், ப்ரஹ்மண்யேவோபாதிஸம்ஸர்க:, க்ஷணே க்ஷணே பந்தமோக்ஷௌ ஸ்யாதாமிதி ஸந்த: பரிஹஸந்தி ।

'நிரவயவஸ்யைவாகாஶஸ்ய ஶ்ரோத்ரேந்த்ரியத்வே'பி இம்ப்ரு

யுடன் சேர்ந்திருந்த ப்ரஹ்ம ப்ரதேச மொன்று, பிரிந்திருக்கும்படியான ப்ரஹ்ம ப்ரதேசம் மற்றொன்று. ஆக இரண்டு ப்ரஹ்ம ப்ரதேசங்களுக்கும் பரஸ்பர பேதம் ஏற்படுகிறபடியால் ஒரு க்ஷணத்தில் ப்ரஹ்மத்திற்குப் பந்தமும் மற்றொரு க்ஷணத்தில் அதற்கு மோக்ஷமும் ஸம்பவிக்கின்றன என்று சொல்லவேண்டிவரும். அப்படிச் சொல்வதை அபிஜ்ஞர்கள் பரிஹஸிப்பார்களன்றோ?

நிரவயவஸ்ய........ந பஹூக்ருத்யதே—'எப்படியானால் நிரவயவமாயும் அந்தக் காரணத்தால் பிந்ந பிந்ந பாகங்களாகப் பிரிக்கக்கூடாமலுமிருக்கும் ஆகா

தத்வத் ப்ரஹ்மணோ'பி—அம்மாதிரியே ப்ரஹ்மத்தின் விஷயத்திலும். ப்ரஹ்மம் என்பது ஒன்றே; தேஹம் முதலிய உபாதிகள் ஒரே இடத்தில் இருக்கின்றன என்னும் நியமமும் இல்லை. ஆகையால், உபாதிஸம்ஸர்க்கத்திற்கு வ்யவஸ்தை சொல்வது ஸாத்யமில்லை. பரப்ரஹ்மத்திற்கே உபாதி ஸம்ஸர்க்கம் சொல்லப்பட வேண்டும்.

"ப்ரதேஶபேதாநியமேநோபாதி ஸம்ஸர்கே" என்னும் ஹேதுவுக்கு "ப்ரஹ்மண்யேவோபாதிஸம்ஸர்க:" என்பது ஸாத்யம்; "உபாதௌ கச்சதி ஸம்யுக்த வியுக்த ப்ரஹ்ம ப்ரதேஶ பேதாத்" என்னும் ஹேதுவுக்கு "க்ஷணே க்ஷணே பந்தமோக்ஷௌ ஸ்யாதாம்" என்பது ஸாத்யம். அதாவது—ஒரு பொழுது ஒரு ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு உபாதி ஸம்பந்தம் ஏற்பட்டால், அப்பொழுது அது ஜீவனாக மாறி அதற்குப் பந்தம் ஸம்பவிக்கின்றது; அடுத்த க்ஷணத்தில் அந்த உபாதி சலித்து மற்றொரு ப்ரஹ்ம ப்ரதேசத்தில் அது ஸம்பந்தப்பட்டால், பூர்வம் பந்தம் ஏற்பட்ட ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு மோக்ஷமும் பூர்வம் பந்தமற்றிருந்த மற்றொரு ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு பந்தமும் ப்ரஸங்கிக்குமன்றோ? இதை அபிஜ்ஞர்கள் ஒத்துக் கொள்வார்களா?

நிரவயவஸ்யைவாகாஶஸ்ய ஶ்ரோத்ரேந்த்ரியத்வே'பி—மறுபடியும் வேறொரு த்ருஷ்டாந்தத்தை அவலம்பித்துப் பாஸ்கர மதஸ்தர்கள் இந்தத் தோஷஸம்பந்

வ்யவஸ்தாவத் ப்ரஹ்மண்யபி வ்யவஸ்தோபபத்யதே' இதி சேத் । நாய-
விசேஷஸம்ஸ்ருஷ்டகர்ணப்ரதேசஸம்யுக்தஸ்யைவ ஆகாசப்ரதேசஸ்
ஸ்ய ச்ரோத்ரேந்த்ரியத்வாத் தஸ்ய ச ப்ரதேசஸ்ய தோஷாநி

சமே காதாகிற இந்த்ரியமாக இருக்கையிலும், 'இது காதாகிற இந்த்ரியம் இது, அந்த இந்த்ரியமன்று' என்று ஒரு வ்யவஸ்தை ஏற்படுகின்றதோ, அம்மாதிரியே ப்ரஹ்மத்தினிடத்திலும் வ்யவஸ்தை உபபந்நமாகக்கூடும்' என்னில், அப்படி உபபத்தி ஸம்பவிக்க மாட்டாது என்று நாம் சொல்வோம். கேவலம் ஆகாசமே காது இந்த்ரியமன்று; ஒருவித

சத்திற்கு ஒரு வ்யவஸ்தையைச் சொல்லுகிறார்கள். குடத்தின் ஆகாசம் என்னும் த்ருஷ்டாந்தம் இருக்கட்டும். ச்ரோத்ரேந்த்ரியம் என்பது ஆகாசமே. அந்த ஆகாசம் தேஹத்தில் மற்றைப் பாகங்களில் ஸம்பந்தப்பட்டபோதிலும், ஒருவித உபாதி ஸம்பந்தத்தால் ச்ரோத்ரத்திற்கு மாத்ரம் ஒருவித இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்படவில்லையா? அதுபோல ஜீவத்தன்மை ஏன் வ்யவஸ்திதமாக இருக்கக்கூடாது? என்பதுதான் அவர்களுடைய கக்ஷி. இதற்கு ஸமாதாநம்: இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்பட்டபோதிலும், உபாதி ஸம்பந்திக்கும் ப்ரதேசத்திற்கு எவ்வித வ்யவஸ்தையும் இல்லை என்பதுதான். ஒரு ப்ரதேசத்தில் உபாதி ஸம்பந்தித்தால், அந்த ஸம்பந்தம் அவ்யவஸ்திதமாக ப்ரதேசாந்தரங்களுக்கும் ஏற்படுகின்றது என்பது அன்றோ நமது ஆக்ஷேபம்? அந்த ஆக்ஷேபம் நிவ்ருத்தமாகாமலே நிற்கின்றது. த்ருஷ்டாந்தத்தில், ஆகாசம் எல்லாருடைய சரீரங்களிலும் எவ்வித நியமமுமின்றிக்கே ஸர்வ ப்ரதேசங்களிலும் ஸம்பந்திக்கின்றது என்பதை ஒத்துக் கொண்டதாலேயே உபாதி ஸம்யோகிக்கும் ப்ரதேசத்தின் அநியமம் ஒத்துக்கொண்டதாகிறது. அது போல ஒரு ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு உபாதி ஸம்பந்தம் வரும்பொழுது பர ப்ரஹ்மம் முழுவதும் உபாதியால் ஸம்பந்தப்பட்டதாகின்றது என்பதை ஒத்துக்கொண்டால், அப்பொழுது, உபாதியுடன் ஸம்பந்திக்கும் ப்ரஹ்ம ப்ரதேசத்திற்கு அநியமம் ஏற்படும்;ப்ரஹ்மத்திற்குத்தோஷமற்றிருக்கும் தன்மையைச் சொல்லும் ச்ருதி வாக்யங்களும் பாதிதங்களாகி விடுமென்றோ? த்ருஷ்டாந்தத்தில் இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்படுகின்றது என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். அதுவும் ஸகல ஆகாசத்திற்கும் இல்லை; நாம் ஒரு ப்ரயத்நம் செய்து, அதனால் ஒருவிதமான காற்று உண்டாகி, அந்தக் காற்றின் ஸம்யோகத்தால் காதுக்குள் இருக்கும் ஒரு பாகத்திற்கு ஒருவித ஸம்ஸ்காரம் ஏற்பட்டு, அப்படி ஸம்ஸ்க்ருதமான அந்தக் காதின் பாகத்துடன் ஆகாசம் ஸம்பந்தப்பட்டால், அந்த ஆகாசத்திற்கு மாத்ரம் இந்த்ரிய வ்யவஸ்தை ஏற்படும். இது, உபாதி ஸம்யோக ப்ரதேசத்தின் வ்யவஸ்தையை அபேக்ஷிக்கவில்லையாதலால், இது அகார்யகரம்.

இப்படி ப்ரபந்நனுக்கு ஸம்பாவிதமான உத்தராகத்துக்கு ப்ராயச்சித்தத்தைச் சொல்லி, இதைக்காட்டிலும் இவ்வுத்தராகமே நேராதபடி செய்துகொள்வது மிகவும் உசிதமாகையினாலே, இதற்குக் காரணங்களான அர்த்த காமங்களில் வாஸனையை ஒழித்துக்கொள்ளுகிற வ்யாஜத்தினால் அவைகளுக்கும் காரணமான ப்ராரப்த பாபாம்சங்களினுடைய நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறான். இக்கர்மங்கள் கழிந்தாலொழிய அவ்வாஸனை ஒழியாதிறே.

'ஸதே ஸமஸ்தபாதகம் ஹ்ருதயஸ்தம் ததா நரணாம் ।
தஸ்மாத்ததம் ஸதாவஸ்யம் ச்ரேயோர்த்தீ த்ருஸ்தஹ்ருஜேத் ॥'

என்று மஹர்ஷிக்கு அன்று அறுதியிட்டபடியே, அதை ஒருபடி அபேக்ஷிக்கப் பதினைந்துபடியாக அநர்த்தத்தை விளைவிக்கும் அர்த்தமென்று பெயர் பூண்ட அநர்த்தம் 'ஜஹிஸ்த்ரூம் ஸஹாஸாஹோ காமரூபம் துராஸதம்' என்கிறபடியே உரு வெளிக் காட்டாதே அநுகூலரைப்போலே அந்தரங்கமாக இருந்து, நினைத்த மாத்ரத்தினால் நாசம் செய்யும் மகா சத்ருவான காமமும், இவ்விரண்டிலும் கொடியதாய்ப் பெரியோரைப் பரிபவித்துப் பாபத்துக் கிடமாக்கும் கர்வமும், ஆகிற இவ் விபரீத விஷக் கொடிகள் அடியேன் மநஸ்ஸில் முளையாதபடி பண்ணியருள வேணுமென்கிறான். இதனால் இவ்வர்த்த காமங்களுக்குக் காரணமான கர்ம மொழிந்தாலொழிய அவற்றில் ப்ரீதி போகாதாகையினால், தமர்கள்கூட்டவல்வினையை நாசம் செய்யுய் சதுர்மூர்த்தியான தேவரீர் இவ்விஷய வாஸனைக்குக் காரணமான வல்வினையை வேரறுத்துத் தரவேணுமென்று அபேக்ஷித்ததாயிற்று.

இப்படி விஷய வாஸனையாகிற விஷக் கொடிகளின் வேரறுத்து, நின் திருவடிகளையே தஞ்சமென்று அடைந்தே அடியேன் நெஞ்சப் பெருஞ் செய்யுள் நின் காரமர் மேனிக் கடிய காதலாகிற கற்பகக் கொடிகள் கடல் புரைய விளையும்படி அருள் மாரி பொழிய வேணுமென்கிறான்.

காமம் ப்ரவர்த்தது—அல்பாஸ்திரங்களான பிறர் பொருளின் பெருமையையும் மாம்ஸாஸ்தி மயமான மடந்தையர் இன்பத்தையுமே தொடர்ந்து, 'யா ப்ரீதி ரவிவேகாநாம்' என்கிறபடியேஅங்கு அநபாயமான அன்புமிகுந்து மோஹித்துத் திரி துயரமெல்லாம் தீர இப்பொழுது பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாளுமவனாய், கொள்ள மாளாவின்ப வெள்ளம் கோதில தந்திடும் வள்ளலாய், அநித்ய ஸ்ரீமானான நின் திருவடியடைந்து அந்தமிலா ஆநந்தம் அநுபவித்திருக்கும் அடியேனுக்கு.

க்வாஹமத்யந்த துர்புத்தி: க்வ சாத்மஹிதவீக்ஷணம் ।
யத்திதம் மம தேவேஶ ததாஜ்ஞாபய மாதவ ॥ 18.

வர்த்ததாம் ஸ்ரீமதி த்வயி—ஸ்ரீமானான உன்னிடத்தில் ப்ரீதியானது, பெருகி வரவேணும். அம்முள்ளிப்பூத் தேனில் மூழ்கி மோஹித்திருந்த யான், இப்பொழுது இவ்வாராவமுதக் கடலைக் கண்டு விடமாட்டேனே என்கிறான்.

ஆக, புத்தி பூர்வ பாபாரம்பங்களுக்கு ஹேதுக்களான அர்த்த காமங்களில் வாஸனையின் நிவ்ருத்தியையும், அதன் காரணமான ப்ராரப்த பாபாம்ச நிவ்ருத்தியையும் ப்ரார்த்திக்கிற இந்த ச்லோகத்தில், உத்தர பாகத்தினால், 'மாற்பால் மனஞ் சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு' என்கிறபடியே அதிகமான பகவத் ப்ரீதி யில்லாதபோது விஷய வைராக்ய முண்டாகா தாகையினாலே, விஷய வைராக்ய ஸித்திக்காகவும் விலக்ஷணமான அநுபவ ஸித்திக்காகவும் பல ரூபமான பக்தியும் ப்ரார்த்திக்கப்படுகிறது.

18. தேவேஶ—தேவாதிராஜனே! அத்யந்த துர்புத்தி:—மிகவும் பொல்லாங்கான புத்தியையுடைய, அஹம் க்வ—அடியேன் எங்கே? ஆத்மஹிதவீக்ஷணம் க்வ—தனக்கு நன்மை தேடிக்கொள்ளுகை என்பது எங்கே? மாதவ—ச்ரிய:பதியே! மம—அடியேனுக்கு, யத் ஹிதம்—யாதொன்று நன்மையா யிருக்குமோ, தத் ஆஜ்ஞாபய—அதனைத் தேவரீர் தாமே ஜ்ஞாபகம் செய்தருள வேணும்.

இப்படி பலரூபமான பக்தியை ப்ரார்த்தித்து, 'ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு விவர்த்ததாம்' என்று பக்தியோக நிஷ்டனுக்குச் சொன்ன பரஜ்ஞாந பரமபக்த்யாதி பல பரம்பரைகளையும் அடியேனுக்குத் தந்தருள வேணு மென்று மேல் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கிறான். இவ்வநுபவ ஸுகத்தின் வாசியறிந்த மஹான்கள் 'அந்தமில் பேரின்பமான மோக்ஷத்திற் காட்டிலும் இது அதிகமென்று 'மட்டேலாவு தண்டுழா யலங்கலாய்ப் புலன் கழல் விட்டு வீள்விலாத போகம் விண்ணில் நண்ணி யேறினும் எட்டினோ டிரண்டெனும் கயிற்றினால் மனந்தனைக் கட்டி வீடிலாது வைத்த காதலின்பமாகுமே' யென்றும் அருளிச் செய்தார்களன்றோ?

'இவ்வாநந்தம் அநுபவிக்க ஆசைப்படுகிற நீர் இதன் காரணமான பக்தியோகத்தைப் பண்ணலாகாதோ?' வென்று ஈச்வரன் கேட்க, க்வாஹம்—அடியேன் எங்ஙனே! யென்கிறான். இருகைகளுமிலா முடவனை யானை யேறும்படி சொன்னால் அது அவனால் செய்யலாகுமோ?

'ஸ்வயம் ப்ரதிஷ்ட்யா ஹிதகஸ்ய வாதநஸ்ய' என்றும், 'அஜ்ஞோ ஜந்துரநீஶோயமாத்மந: ஸுகது:கயோ:' என்றும் சொல்லுகிறபடியே ஜ்ஞாந சக்தி சூந்யனாய் அத்யந்த பராதீநனாய்த் தானாக நீட்டவும் முடக்கவும் கூட முடியாதவனாகவன்றோ அடியேன் ஸ்வரூப மிருப்பது என்று சொன்னதாகிறது.

'ஆனாலும் நீர் சேதநனாகையினாலே உள்ள அறிவைக் கொண்டு இப்போது ஆசைப்படுகிற பலம் கைபுகுகிறவளவும் அதை அநுஷ்டித்துப் பார்க்கலாகாதோ?' வென்று ஈச்வரன் கேட்க, உத்தரம் சொல்லுகிறான். 'அத்யந்த துர்புத்தி:' முடிய விபரீதமான புத்தியை உடையவனன்றோ அடியேன் என்கிறான். இதனால் அடியேன் அநாதிகாலமாக, ஐவர் குமைக்கும் சிற்றின்பமவையே சிந்தித்து, அற்பசாரங்களான வவையே சுவைத்து, விபரீத வாஸனையையுடைய மனத்தைக்கொண்டு, பக்திபண்ண முடியாதென்று சொன்னதாயிற்று. 'ஆனாலும் கீழ்ச்சொன்னபடியே, விஷய வாஸனையை வேரறுத்துத் தருகிறோம்; அதன்பிறகு ஆத்மஹிதமான இவ்வுபாயத்தை அநுஷ்டித்தாருமென்று ஈச்வரன் கேட்க, உத்தர மளிக்கிறான்: க்வ சாத்மஹிதவீக்ஷணம்—ஆத்மாவென்றொரு வஸ்துவுண்டாய், அதற்கு ஹிதமென்றொரு கார்யமுண்டாய், அதை ஆலோசித்துப் பார்ப்பது மென்பது அடியேனுக்குப் பொருந்துமோ? மறந்திகழும் மனமொழித்து, மயர்வற மதிநல மருளப்பெற்ற மஹான்கள் மெய்ஞ்ஞானம் பொருந்தி மேவக்கூடிய இவ் விஷயத்தை, 'ஆழியான் தன் திறத்தோரன்பிலா வறிவிலாத நாயினேன்' என்னும்படியான அடியேன் முகந்து பார்க்கவும் முடியுமோ, என்கிறான். ஆனாலும் க்ருஷி பலத்தை ஆசைப்படுமவன் க்ருஷியைப் பண்ணவேண்டாவோ? உபாயம் அநுஷ்டிக்க முடியாத உமக்கு அதன் பலம் கைபுகுவது எங்ஙனே யென்று ஈச்வரன் கேட்க உத்தரம் சொல்லுகிறான்: யத்திதம் மம தேவேஶ ததாஜ்ஞாபய—அடியேன் செய்யவேண்டும் ஹிதத்தையும் தேவரீரே அடியேனைக் கொண்டு செய்வித்தருள வேணுமென்கிறான்.

இங்கு (பாரார்த்த்யைக ஸ்வரூபமான) பிறருடைய ப்ரயோஜநத்துக்காகவே இருக்கும் தன்மையையுடைய ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைக் குறிப்பிடுகிற 'மம' என்கிற இதனால், 'தனக்கேயாக வெனைக்கொள்ளு மீதே' என்பது போல, தேவரீருடைய உகப்பே அடியேனுக்கு ப்ரயோஜநமாக, தேவரீரை அநுபவிக்க ஆசைப்படும் அடியேனுக்கு அதைத் தந்தருளி யுகக்காதபோது தேவரீருடைய சேஷித்வம் அழிந்து போகாதோ? ஆகையினால், அடியேனுக்கு இவ்வநுபவாநந்தத்தைக் கொடுத்தருளி தேவரீர்ஸ்வரூபம் அழியாதபடி பண்ணியருளவேணு மென்கிறானாயிற்று. உடைமையை ரக்ஷித்து உகக்குமவன் அதனிடம் கூலியும் கேட்பதுண்டோ? என்கிறான். இங்கு 'தேவேஶ' என்கிற இதனால் அடியேனைப் போலன்றிக்கே ப்ரயோஜநாந்தரத்திற்காகத் திருவடிகளையே தஞ்சமென்றடைந்த தேவதைகளுக்காகவும் கூட, நீணகம் சுற்றி நெடுவரைநட் டாழ்கடலைப் பேணான் கடைந் தமுதம் கொண்டு உகந்ததை யாவரும் கண்டதில்லையோ?, என்று சொன்னதாயிற்று.

ஷொாஹம் தெ ஷெவஷெவெப தாஅ-ஜநா உள ஷ்தூ-தள ந அ ।
ஷாஉய-ஆவாநு கூரவாஉாத்ரு உஜொவுத்தி: வ்ருஷீஉ ஜெ 19.

'ஆனாலும் நீர் ஆசைப்படு மிவ்வநுபவத்தை யொரு புண்ணிய பரிபாக ஸமயத்தில் உமக்குத் தருகிறோம்; அதுவரையில் பொறுத்திருக்க வேணு மென்று ஸர்வேசுவரன் திருவுள்ளமாக நினைத்து உத்தரம் சொல்லுகிறான்: ஊயுவ—ஆச்ரித ரக்ஷணார்த்தமாகவே அகலகில்லே னிறையு மென்று பிரிவில்லாத பெரிய பிராட்டியாரை உடையவனே ! என்கிறான்.

இதனால் 'இன்பம் பயக்க வெழில் மலர் மாதரும் தானு மிவ்வேழுலகை யின்பம் பயக்க வினிதுடன் வீற்றிருந்தாள்கின்ற வெங்கள் பிரான்' என்கிறபடியே பேரின்ப மனுபவிக்கும் பெற்ற தாய் தந்தையர், ப்ரிய ஹிதங்களை இழந்து வருந்தும புத்ரனை கண்டு உகப்பதுண்டோ ? என்கிற னென்றதாயிற்று.

19. ஷெவஷெவெப—ஸர்வோத்க்ருஷ்டனான எம்பெருமானே! ஷொாஹம்—அடியேன், தெ ஸஅ-ஜநாஉள—தேவரீருடைய, திருவாராதநாதிகாரத்திலும், ந ஷாஉய-ஆவாநு—சக்தியுடையேனல்லேன்; ஷ்தூ-தள அ—தேவரீரை ஸ்தோத்ரம் செய்வதிலும், ந ஷாஉய-ஆவாநு—சக்தியுடையேனல்லேன்; [ஸதஃ—ஆகையினாலே] கூரவாஉாத்ரு உஜொவுத்தி:—க்ருபாகுணம் ஒன்றையே மனோதர்மமாக உடைய தேவரீர், ஜெ—அடியேன் திறத்தில், வ்ருஷீஉ—(அந்த க்ருபையடியாகவே) இரங்கியருள வேணும்.

இப்படி, தன் திருவடிகளையே தஞ்சமென் றடைந்து முகில் வண்ண னருள் மாரியையே நினைந் திருக்கும் சாதகம் போன்ற இச்சேதநன் திறத்தில் ஸுலபனான ஸர்வேசுவரன் இவன் அபேக்ஷித்தபடியே பக்தியோக ஸாத்யமான பரஜ்ஞாந பரம பக்த்யாதிகளையும் அதற்கு விஷயமான தன் ஸ்வரூப ரூப குணாதிகளையும் யதாவஸ்திதமாக இவன் அநுபவிக்கும்படி காட்டியருள, அவாங்மநஸ கோசரயாய், பேணிவானோர் காண மாட்டாப் பீடுடைய பெருமானுடைய பெருமைகளையும் முன்னநுபவிக்க வாசைப்பட்ட தானதை யணுகி அநுபவிக்கயோக்யமில்லாத தன்னுடைய அஜ்ஞாநாசக்திகளையும் கண்டு எதிரிலிருந்து, வாயார வாழ்த்தி வணங்கி ஈடுபட யோக்ய மில்லாத சிதிலித ஸர்வேந்த்ரியனாய், தன்னைக் கொண்டு அகன்றுபோவதே தனது தாழ்மைக்கு உசிதமென்று நினைத்து, முன்பு இவ்விஷயமறியாமல் அபேக்ஷித்ததைப் பொறுத்தருள வேணு மென்று ப்ரார்த்திக்கிறான்.

உவஅாஷாவஷெபெஷ கூரதாதஹொாஹஉயா ।
ஸவஅாஷா திஷாநு ஷவஷாநு க்ஷஉஷ்வ வ-ஷ-ஷொத்தஉ: 20.

ஷொாஹம்—வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலைப் பயனையே பேரின்பமாக அனுபவித்துப் போந்த அடியேன்.

தெ ஷெவ ஷெவெப—'வானவர்தம்மை யாளுமவனும் நான்முகனும் சடைமுடி யண்ணலும் செம்மையா லவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித் திரிவரே' என்னும்படி தேவர்களுக்கு மீச்வரர்களான ப்ரம்ஹாதிகளையும் நினைத்தபடி ஏவல் தேவை கொள்ளும் தேவரீருடைய.

தாஅ-ஜநாஉள ஷ்தூ-தள நஅ ஷாஉய-ஆவாநு—ஒற்றை விடையனும் நான்முகனு மறிய முடியாததாய், நினைந்து நைந்துள் கரைந்துருகி இமையோர் பலரும் முனிவரும் புனைந்த கண்ண நீர்சாந்தம் புகையோ டேந்தி வணங்கினால் மாளும்படியான பெருமைகளை, பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பு மாய்நிறை வொன்றில்லா நீசனான வடியேன் அணுகவும் வாழ்த்தவும் அர்ச்சிக்கவும் அர்ஹனாகவோ !

கூரவாஉாத்ரு உஜொவுத்தி:—கடலைக் கையாலிறைக்க வாசைப்பட்ட அடியேனுடைய இந்த அபசாரத்தினாலுண்டான சீற்றத்தைத் திருவுள்ளத்தி லிருத்தாது போக்கியருளவேணும். அடியேனுடைய ஸம்ஸார தாபங்களாகிற தாவாக்நி தீரும்படி யருள்மாரி பொழியவேணு மென்கிறான்.

வ்ருஷீஉ ஜெ—'தெஜைவஷ-உவெண அத-ஹ-ஜ-ஜெந' என்று விச்வரூபத்தைக்கண்டு பயந்த அர்ஜுநன் அடியேன் அநுபவிக்க யோக்யமான பழைய க்ருஷ்ண ரூபத்தையே காண ப்ரார்த்தித்தாப்போலே, இவனும் சிறியஞானத்து அஜ்ஞனானவடியேனிவ்வாராவமுதக் கடலைப் பருகிக் களித்திடும்படி கோடியைக் காணியாக்கித் தரவேணு மென்கிறான்.

20. வ-ஷ-ஷொத்தஉ—வாரீர் புருஷோத்தமரே! ஸஹொஉஷ:— நான்தோறும் ஊயா—அடியேனால், உவஅாஷாவஷெபெஷ—உபசரிக்கிற வ்யாஜத்தாலே, கூரதாநு—பண்ணப்பட்ட, உஉாநு ஷவஷாநு ஸவஅாஷாநு—இந்த பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்கள் எல்லாவற்றையும், க்ஷஉஷ்வ—க்ஷமித்தருள வேணும்.

இப்படி, உயர்வற வுயர் நலமுடைய ஈச்வரன் பெருமையையும் நித்ய ஸூரிகளுக் கும் நிலமில்லாத சில விஷயத்தை யநுபவிக்க ஆசைப்பட்ட நாணமில்லாச் சிறுதகைய ஞாய் நாயினே னென்னும்படியான தன்னையும் தெளியக்கண்டு தேவதார்ஹமான புரோடா சத்தை நாய் தீண்டினாற்போலே, இவன் பெருமைக்குப் பொருந்தாத நாம் இவனை யநு ஸந்தித்துக் கெடுத்து விட்டதாகத் தீர்மானித்து, வள வேழுல கென்கிற திருவாய் மொழியில் ஆழ்வார் அநுஸந்தித்தாப்போலே தான் செய்த உபசாரமென்கிற அபசாரங்களைப் பொறுத்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறான்.

உபசாராபதேசேந—இவைகள் தேவரீருடைய திருவுள்ளத்துக்கு உகந்த விஷயங்களென்று ஓலைப்புறத்தில் எழுதிவைத்திருப்பதைப் பார்த்து ப்ரமித்துச் செய்துவிட்டேன். தேவரீர் பெருமைக்குத் தகாதபடி அடியேன் அடிமை செய்வது அபசார மென்று அறிந்தால், கைவாங்கி ஒதுங்கி வர்த்திக்க மாட்டேனோ? என்கிறான். வஸிஷ்டன் க்ருஹத்தில் சண்டாளன் சென்றடிமை செய்வது அவருக்கு உபசாரமாகுமோ? என்கிறான்.

க்ருதாநஹாஹ்மயா—இவ் வுபசாரங்களாகிற அபசாரங்களை 'ஸக்ருத் க்ருதஸ்ராவாயது' என்கிறபடியே ஒரு தடவை செய்தொழிந்தேனோ? அநுஷ்டிக்காத பொழுது அனர்த்தம் விளையுமென்கிற பயத்தினால் நாடாத மலர் நாடி நாடோறும் நாரணன்தன் வாடாத மலரடிக் கீழ் வைத்து, இவ்வபசாரங்களை ப்ரதிதினமும் அநுஷ்டித்துப் போந்தேன் என்கிறான். ப்ரத்யவாயங்களைச் செய்யாதபோது ப்ரத்யவாயம் வருமென்று செய்தே னென்கிறான். 'மயா'—ஸர்வேச்வரன் செய்விக்கச் செய்திருக்கச் செய்தேயும், அவ்வுபசாரங்களைச் செய்தது இப்போது அபசாரமாகத் தோன்றுகையாலே 'நாஹம் கர்தேஶ்வர:' என்கிற சரண்ய ஸ்வபாவத்தை நினைத்து 'நான் செய்தே'னென்கிறான்.

அபசாரா நிமாந் ஸர்வாந்—கீழ்ச்சொன்னபடி தினந்தோறும் செய்த பாபங்களிருக்க, இந்த ஸ்தோத்ரமென்று பெயருடைய பாபங்களையு மென்றபடி. இந்த ஸ்தோத்ரமும் அவன் பெருமைக்குத் தகாத விஷயமாகையினாலே குற்றமென்னக் குறையில்லை யிறே.

'நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையாலேத்த' என்கிறபடியே பெருமையுடைய ப்ரஹ்ம ருத்ராதிகளுக்குப் பொருந்தின இவ்விஷயத்தை அறிவிலா நீசனான அடியேன் தொழுது அநுஸந்தித்தது அபசாரமென்றிருக்கிறான்.

க்ஷமஸ்வ—'ஸர்வம் ஸஹதி ஸஹிஷ்ணு:' என்றிருக்கிற அடியேனுடைய அபசாரங்களுக்குத் தக்கபடி சிக்ஷை செய்து பயனில்லை யாகையினாலே பொறுத்தருளுவதே உசித மென்கிறான்.

புருஷோத்தம—குற்றங்களைக் கணக்கிட்டு வைத்து, கொடுமையான சிக்ஷை செய்திடுவது புருஷோத்தமனுக் கன்றோ ஸ்வபாவம்!

'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' என்றும், 'என்னடியா ரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்' என்றிருக்கும் ஆச்ரித வத்ஸலனான புருஷோத்தமனுடைய பெருமைக்குத் தக்கபடி இவ்வபசாரங்களை அடையப் பொறுத்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறான்.

இப்படி இந்த ஜிதந்தா ஸ்தோத்ரத்தில் ரிக்வேத மந்த்ரமான முதல் ச்லோகத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட சரண்ய ஸ்வரூபமும், சரண்யதோபயுக்தங்களான குண விசேஷங்களும், சரணாகதியும், அதன் அங்கங்களும், உத்தர க்ருத்யமான நிரபராத ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்ய மிருக்கும்படியும், இப்ரபந்நனுடைய ப்ரார்த்தநாநுகுணமாக ஸர்வேச்வரன் இவனுக்குக் கொடுத்தருளும் ஆநந்தமயமான அநுபவ விசேஷங்க ளிருக்கும்படியும், மற்றும் சரணாகதிக்கு அவச்யாபேக்ஷிதங்களான அம்சங்களும் பரக்க நிரூபிக்கப்பட்டன.

186786.

உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

நகை வர்த்தகர்கள்.




தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

காட்சி அறை.

25, சைனுபஜார் ரோட், மதராஸ்.

நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.

காட்லாக்குக்கு எழுதுங்கள்.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.

தலைவலி	இருமல்
நரம்புவலி	ஜலதோஷம்
முதுகுவலி	நெருப்புக்காயம்
இடுப்புவலி	காயங்கள்
கீல்வாயுவு	சுளுக்குகள்

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய் மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.